# அரசு ஊழியர்

மார்ச் 2020

மலர் : 41 இதழ் : 2

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக

அச்சிட்டு வெளியிடுபவர் : மு.அன்பரசு

ஆசிரியர் : ஆ.செல்வம்

ஆசிரியர் குழு

மு.அன்பரசு, மொ.ஞானத்தம்பி, மு.பாஸ்கரன், இரா.ந.நம்பிராஜன், தெ.வாசுகி

முகவரி : பழைய எண். 48

புதிய எண் 46, தேரடித் தெரு

திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.

e-mail : arasuoozhiyar@gmail.com

*அச்சகம்: சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ், 19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு, எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை, சென்னை - 600 002.*

*ஆண்டுச் சந்தா : ரூ. 100 தனி இதழ் ரூ. 10*



## சூடா ஒரு கோப்பை சூப்

## சத்திய பேரிகை!

கத்தி முனைதனிலே பயங்
காட்டும் உலகினிலே
சத்திய பேரிகையை நான்
தட்டி முழக்கிடுவேன்!

ஊரை எழுப்பிடவே துயர்
ஒன்றை நொறுக்கிடவே
தாரை முழக்கிடுவேன்
தமிழ்ச்சாதி விழித்திடவே!

\- கவிஞர் தமிழ்ஒளி



தலைவர் மடல்

# மதவெறி அரசியலின் ஊழித் தாண்டவம்!

குடியுரிமை திருத்தச் சட்டத்திற்கு எதிராக நாடு முழுவதிலும் நடந்து வரும் போராட்டங்களை சகித்துக் கொள்ள முடியாமல் அவற்றை சீர்குலைப்பதற்கு பாஜகவும் ஆர்எஸ்எஸ் பரிவாரங்களும் வன்முறைகளை தூண்டி வருகின்றன. ஆனால் இந்த வன்முறைகள் எதிர்வினைகளைத்தான் ஏற்படுத்தியுள்ளது. சென்னை வண்ணாரப்பேட்டையில் அறவழியில் அமைதியாகப் போராடியவர்கள் மீது காவல்துறையினர் தாக்குதல் நடத்தினர். இதனால் இப்போராட்டம் தமிழகம் முழுவதும் பரவியது.

ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம், ஜாமியாமிலியா பல்கலைக் கழகம், அலிகார் முஸ்லிம் பல்கலைக் கழகம் உட்பட பல்வேறு இடங்களில் போராடும் மாணவர்கள் மீது ஆர்எஸ்எஸ் பரிவாராம் காவல்துறை துணையுடன் பகிரங்கமாகவே தாக்குதல் நடத்தியது. உத்திரப்பிரதேசம் உள்ளிட்ட பாஜக ஆட்சி செய்துவரும் மாநிலங்களில் போராட்டங்களில் ஈடுபடுவோர் மீது தாக்குதல் தொடுக்கப்பட்டு பலர் உயிரிழந்துள்ளது இந்தியா முழுவதிலும் போராட்ட விதைகளை முளைவிடச் செய்துள்ளது.

தலைநகர் தில்லியில் நடந்துவரும் போராட்டம் பெண்களால் தலைமையேற்கப்படும் போராட்டமாக அமைதியான முறையில் இரண்டுமாதங்களாக நடந்து வரும் நிலையில் போராடும் மக்களை, பெண்களை அச்சுமூட்டும் வகையிலும், ஆத்திரமூட்டும் விதமாகவும் பாஜக மத்திய அமைச்சர்கள் உள்ளிட்ட அக்கட்சியின் பிரமுகர்கள் பலரும் வன்முறையை தூண்டும் வகையில் பேசி வருவது பாஜகவின் உண்மையான முகத்தை உலகிற்கு வெளிக் கொணர்நதுள்ளது.

குடியுரிமை திருத்தச் சட்டம், மக்கள் தொகை பதிவேடு, தேசிய குடிமக்கள் பதிவேடு போன்ற பாஜக அரசின் திட்டங்களால் பொதுமக்களுக்கு குறிப்பாக சிறுபான்மை மக்களுக்கு ஏற்பட்டுள்ள நியாயமான அச்ச உணர்வை நீக்குவதற்கு பதிலாக பிரதமர் மோடியும், உள்துறை அமைச்சர் அமித்ஷாவும் குடியுரிமை திருத்தச் சட்டத்தை திரும்பப் பெறும் பேச்சுக்கே இடமில்லை என்று மேடைகளில் கொக்கரித்ததை ஊடகங்களில் கண்ட இந்தியப் பொதுமக்கள் அனைவரும் பாஜக ஆர்எஸ்எஸ் போன்ற மதவாத சக்திகளின் கோரப்பற்களை பார்க்க நேர்ந்துள்ளது.

இந்நிலையில் காவல்துறையின் உதவியுடனும், பாஜக அரசின் ஆசிர்வாதத்துடனும் தில்லியில் நடைபெற்றுள்ள வன்முறை வெறியாட்டங்களுக்கு காவல்துறையினர் அரசு அதிகாரிகள் உள்ளிட்ட பொதுமக்கள் 45 பேர் பலியாகியுள்ளனர். இதில் கொடுமை என்னவென்றால்

வன்முறை வெறியாட்டங்களின் போது காவல்துறையினர் உடனடி நடவடிக்கை எடுக்காமல் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்ததை உச்சநீதிமன்றம் கண்டித்திருப்பதும் வன்முறைகளால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு உரிய சிகிச்சை அளிப்பதற்கு நள்ளிரவில் தில்லி உயர்நீதிமன்றத்தின் கதவைத் தட்டி உத்தரவைப் பெற வேண்டிய அபாயகரமான சூழல் ஏற்பட்டிருப்பதும்தான்.

இந்த வன்முறைகள் திட்டமிடப்பட்டு நிகழ்த்தப்பட்டுள்ளன என்பதற்கான ஆதாரங்கள் ஒவ்வொன்றாக வெளியாகிக் கொண்டிருக்கின்றன. காவல்துறையினர் கைகளில் இருக்க வேண்டிய துப்பாக்கி வன்முறையாளர்களிடம் இருந்ததையும், காவல்துறையினர் மட்டுமில்லாமல் பாஜக கும்பல் ஒன்றும் துப்பாக்கியால் சுட்டதால்தான் 30க்கும் மேற்பட்டோர் உயிரிழக்கக் காரணம் என்றும் செய்திகள் வெளியாகியுள்ளன. பாஜகவினரின் இந்த வெறியாட்டத்தை படம் பிடித்த பத்திரிகையாளர்கள் தாக்கப்பட்டதும் அவர்களின் கேமராக்கள் அடித்து நொறுக்கப்பட்டதும், சிறுபான்மை மக்கள் அதிகமாக வசிக்கும் பகுதியில் உள்ள பெட்ரோல் பங்க் மற்றும் அதனை சுற்றியுள்ள கடைகள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் பாஜக மற்றும் ஆர்எஸ்எஸ் அமைப்பினரால் சூறையாடப்பட்டு தீவைத்து கொளுத்தப்பட்டதை மறைக்கும் விதமாக காவல்துறையினர் அப்பகுதியில் வைக்கப்பட்டிருந்த சிசிடிவி கேமராக்களை உடைக்கும் காட்சிகளும் நடந்த வன்முறைக்கு யார் காரணம் என்பதை நாட்டு மக்களுக்கு சொல்லாமல் உணர்த்தியுள்ளது.

குடியுரிமை திருத்தச் சட்டத்திற்கு எதிராக போராட்டம் நடைபெறும் இடத்திற்கு அருகே ஆதரவு போராட்டம் நடத்த அனுமதியளித்தது ஏன்? வன்முறை நிகழும் என்று முன்கூட்டியே உளவுத்துறையினர் எச்சரித்திருந்த நிலையிலும் போதிய பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்யத் தவறியது ஏன்? வன்முறை தொடங்கியதும் உதவி கேட்டு பொதுமக்கள் தொலைபேசியில் அழைத்தபோது காவல்துறையினரும், தீயணைப்புத் துறையினரும் உடனடியாக வராதது ஏன்? என்ற உச்சநீதிமன்றத்தின் கேள்விகளுக்கும் உரிய பதில்கள் அரசாங்கத்தின் தரப்பில் இல்லை என்பதிலிருந்து இது சங் பரிவாரங்களால், ஆளும் பாஜகவின் அருளாசியுடன் திட்டமிடப்பட்டிருக்கும் வன்முறை என்பது உறுதியாகியுள்ளது.

பொறுப்பில் உள்ளவர்களே வன்முறையை தூண்டும் வகையில் பேசிய பேச்சுக்களும் அதை கண்டிக்காத கட்சித் தலைமையும் அவர்களின் வெறிப்பேச்சு நாடு முழுக்க சமூக வலைத்தளங்களில் வீடியோக்களாக வலம் வந்துகொண்டிருக்க அதை நாங்கள் பார்க்கவில்லை என்று தில்லி போலீசார் உயர்நீதிமன்றத்தில் கூறியிருப்பதும் அசாதாரணமான செயல்கள். "தில்லி போலீசாரின் நிலையைப் பார்த்து வியப்படைகிறோம்.'' என்று கூறிய நீதிபதிகள் சம்பந்தப்பட்ட வீடியோக்களை அவர்களுக்கு போட்டுக்காட்டி வழக்கு பதிவுசெய்ய உத்தரவிடப்பட்டும், தற்போது வரை வழக்கு பதியப்பட்டதா இல்லையா என்பது உறுதிப்படுத்தப்படாத நிலையில், பாஜகவின் வன்முறை வெறியாட்டத்திற்கு தில்லி காவல்துறை எந்த அளவிற்கு கைகோர்த்துள்ளது என்பதற்கு இதைவிட சிறந்த உதாரணம் தேவையில்லை.

மக்களை காக்க வேண்டிய அரசும் அதன் காவல்துறையும், தங்கள் உரிமைக்காக போராடும் மக்களை வன்முறை வெறியாட்டங்களால் ஒடுக்கப் பார்ப்பதும், வீழ்த்த நினைப்பதும் எந்த காலத்திலும் வெற்றி பெற்றது கிடையாது. எந்த நியாயமான போராட்டங்களையும் வன்முறைகளாலும் அதிகாரச் செருக்காலும் வீழ்த்திவிட முடியாது என்பதை பாஜக அரசும் அதன் அமைச்சர்களும் வரலாறுகளை தெளிவாக படித்துக் கற்றுக் கொள்ளட்டும்.

கூட்டிக் கழித்துப் பார்த்தால் மத்திய பாஜக அரசு மக்களை திசை திருப்பி பொருளாதார நெருக்கடி, இளைஞர்களின் எதிர்காலம், வேலைவாய்ப்பின்மை போன்ற பிரச்னைகளை பின்னுக்குத் தள்ளி தன்னுடைய மதவாத பாசிசத்தில் வெற்றி கண்டிருக்கிறது என்பதை நாம் ஒப்புக்கொண்டுதான் ஆக வேண்டும். இந்தியாவின் 10சதவீத பணக்காரர்கள் தேசத்தின் 77 சதவீத செல்வத்தை ஆக்கிரமித்துள்ளதும், இந்தியாவின் பெருங்கோடீஸ்வரர்களின் எண்ணிக்கை 2000ஆம் ஆண்டில் 7 ஆக இருந்தது 2018ஆம் ஆண்டில் 119 ஆக உயர்ந்துள்ளதும், ஒரு ஆடைதயாரிப்பு நிறுவனத்தின் முதன்மை அதிகாரி ஒரு ஆண்டிற்கு ஈட்டும் வருமானத்தை ஒரு கிராமப்புற உழைப்பாளி ஈட்ட 941 ஆண்டுகள் ஆகும் என்ற புள்ளிவிவரமும், இந்தியாவின் பணக்காரர்கள் ஒவ்வொரு நாளும் கோடிக்கணக்கில் கொள்ளையடித்து வரக்கூடிய நிலையில் மறுபுறத்தில் வேலைவாய்ப்புகள் கடந்த 45 ஆண்டுகள் இல்லாத அளவிற்கு வீழ்ச்சியடைந்துள்ளதும், விலைவாசி எட்டிப்பிடிக்க முடியாத அளவிற்கு உயர்ந்து போயுள்ளதும், சிறுதொழில்களும், சிறு வணிகர்களும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதும், விவசாயம் நட்டம் தரும் தொழிலாக மாறியுள்ளதும், இந்தியாவில் 14 கோடிபேர் மீளமுடியாக கடன்வலையில் சிக்கியுள்ளதும், கிராமப்புறத்தில் நுகர்வோர் செய்யும் செலவு 8.8 சதவீதமாக குறைந்துவிட்டதும் பொருளாதார வல்லுநர்கள் இந்தியாவின் பொருளாதாரம் படுபாதாளத்திற்கு உருண்டு கொண்டிருக்கிறது என்று அபாயச் சங்கு ஊதிய பின்னரும் மோடியும், அமித்ஷாவும் நாட்டை பொருளாதார ரீதியாக முன்னேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளாமல், குடியுரிமை திருத்தச் சட்டத்தை அமல்படுத்துவதிலிருந்த ஒரு அடி அல்ல ஒரு இஞ்ச்கூட பின் வாங்க மாட்டோம் என்று கொக்கரிப்பதிலிருந்து இந்தியாவில் நடந்து கொண்டிருப்பது மதவெறி அரசியலின் ஊழித்தாண்டவம்தான் என்பது உறுதிபடுத்தப்பட்டுள்ளது. இந்த மதவெறி பிடித்த அரசிடமிருந்து நாட்டை மீட்டெடுப்பதும், தேசத்தை பொருளாதார முன்னேற்றப்பாதையில் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை இப்பொழுதிலிருந்தே மேற்கொள்ள ஆயத்தமாக வேண்டியதும் அரசு ஊழியர்கள் உள்ளிட்ட பொதுமக்கள் நம் அனைவரின் இன்றிமையாக் கடமையாகும்.

❖

# மோடியின் கனவும் தொழிற் சங்கங்களின் கடமையும்

அன்பிற்குரிய இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களே,

வணக்கம். இந்திய பிரதமர் என்று அழைப்பதைவிட பாரத பிரதமர் என்று அழைப்பதே உங்களுக்கு விருப்பமானது. ஏழை மனிதனின் மகன் உங்கள் முன் பிரதமராகி நின்று கொண்டு இருக்கிறேன். நீங்கள் 12 மணி நேரம் உழைத்தால் நான் 13 மணி நேரம் உழைக்கிறேன், நீங்கள் 14 மணி நேரம் உழைத்தால் நான் 15 மணி நேரம் உழைப்பேன் (மக்கள்) ஏன் என்றால் நான் பாரத பிரதம மந்திரி அல்ல பிரதம சேவகன் ஆனாலும் இந்திய மக்களின் விருப்பம் என்னவோ உங்களை இந்திய பிரதமர் என்று அழைப்பதே ஆகும். அந்த வகையில் ஒவ்வொரு இந்தியனின் உள்ளக்கிடக்கையையும் உங்கள் கவனத்திற்கு கொண்டு வருவதே இந்த மடலின் நோக்கம்.

இந்தியப் பிரதமர் மோடி அவர்களே!

இந்திய கிராமங்களிலும், நகரங்களிலும் தற்போது வானம் சிவந்து விடியலை அழைத்துக் கொண்டு வந்த வண்ணமே உள்ளது. பறவைகள் சாலையை வரவேற்றுக் கூவிக்கொண்டுதான் இருக்கின்றன. ஆனால் 2014 மே 18க்குப் பின்பு ஒலிக்கும் பறவைகளின் கூவலிலும் ஏனோ ஒரு பதற்றம் தொற்றிக்கொண்டுள்ளதைக் காண முடிகிறது. சிவந்த விடியலின்போதுகூட வெப்பம் தகிக்கிறது. வீட்டு சுவற்றில் ஒண்டி இருக்கும் பல்லியின் குரல்கூட யாரோ ஒருவன் அம்பின் முனையை கூர் தீட்டுவதைப்போல் சப்தம் கேட்கிறது. அது ஏன்? 2014ல் மே 18 அன்று கங்கைக் கரையில் நின்று நீங்கள் ஆற்றிய உரையைக் கேட்டபின்பே தேசம் முழுவதும் இத்தகைய பதற்றங்கள் இன்று வரை தொற்றிக் கொண்டிருக்கின்றன.

பிரதமர் மோடி அவர்களே கங்கைக் கரையில் நின்று நீங்கள் ஆற்றிய கனவு உரையின் ஒருசில பகுதிகளை மீண்டும் மீண்டும் உங்கள் கவனத்திற்கு கொண்டு வருகிறோம். அதன் அர்த்தம்... உள்ளார்ந்த அர்த்தம் என்ன என்பது உங்களால் விளக்கப்பட வேண்டுமென்பதற்காக.




**கங்கைக் கரையில் தாங்கள் ஆற்றிய கனவு உரையிலிருந்து...**

ஒவ்வொருவருடைய வாழ்விலும் இப்படியான தருணம் வரும். கடவுளின் அருள் இல்லாமல் அது கை கூடாது. கங்கா மாதாதான் என்னை இங்கு அழைத்து ஒரு பொறுப்பை ஒப்படைத்திருக்கிறார். அவள் எனக்கு வழிகாட்டியாக இருக்கும்வரை அந்தப் பொறுப்பைகளைச் சிறப்பாகச் செய்து முடிப்பேன்.

கங்கை அதன் தொடக்க இடத்திலிருந்து கடலில் கலக்கும் இடம் வரையிலும் மேடு பள்ளங்களில் விழந்தெழுந்து துடிதுடித்தபடியே செல்கிறாள். என்னை இந்த அழுக்கில் இருந்து... அந்த அசுத்தத்தில் இருந்து யாராவது காப்பாற்றுவீர்களா? இதுபோல் நான் செய்து முடிக்கப் பல விஷயங்கள் இருக்கின்றன.

நான் இந்த மண்ணுக்கு வந்தது ஒருசில விஷயங்களை செய்வதற்குத்தான். உங்களுடைய உதவியோடு இந்த பனாரஸை தேசத்தின் தலைநகரமாக ஜொலிக்கச் செய்ய வேண்டும். பாரதம் எப்போது உலகில் உச்சத்தில் இருந்ததோ அப்போது பனாரஸ் அதன் ராஜகுருவாகத் தலைமை பீடமாக



இருந்து பனாரஸ் ராஷ்ரா குருவாக ஆகவில்லையென்றால் பாரதம் எப்படி ஜகத்குருவாக முடியும்?

இந்த மண்ணுக்கு அந்தத் தகுதி இருக்கிறது. வாழும் மக்களுக்கு அந்தத் திறமை இருக்கிறது. இந்த மண்ணில் பாரம்பரியத்திற்கு அந்த சக்தி இருக்கிறது. இந்த நகரின் ஒவ்வொரு மூலைமுடுக்கிலும் அந்த வலிமை இருக்கிறது. என்னுடைய வேலை என்பது அந்த சக்திகளையெல்லாம் ஒன்று சேர்ப்பது மட்டுமே. ஒன்றுசேர்த்து உங்களை நடக்க வைப்பதுதான் நீங்கள் விழித்தெழுந்து நடக்க ஆரம்பித்து விட்டால் இந்த உலகில் எந்த சக்தியாலும் உங்களை தடுக்க முடியாது.

எனக்கு ஒரு கனவு உண்டு. அதை காசியில் இருந்து தொடங்க விரும்புகிறேன். ஆனால் அதை அரசாங்கம் செய்ய முடியாது. நீங்கள்தான் செய்ய வேண்டும்.

2019ல் தொடங்கி இன்று மகாத்மா காந்தி பிறந்து 150 ஆண்டுகள் முடிந்துவிட்ட நிலையில் உலகுக்கே வழிகாட்டியான ஒரு யுக புருஷரான அந்த மகாத்மா பல விஷயங்களை முன்வைத்தார். அவற்றில் ஒரு விசயத்தை மட்டும் அவர் எந்த சமரசத்திற்கும் இடம் கொடுத்ததில்லை. அதுதான் தூய்மை. தூய்மையில் அலட்சியமாக இருந்தால் ஆஸ்ரமத்தை விட்டு வெளியே துரத்தி விடுவார். மகாத்மாவின் 150வது ஜெயந்தியை கொண்டாடவிருக்கும்போது அவருடைய ஆசையை தேசம் பூர்த்தி செய்து தருமா? 150வது பிறந்தநாளில் இந்தியாதான் சுத்தமாகிவிட்டதா? காசி அதற்கான தொடக்கத்தை செய்து தந்துள்ளதா?

உதாரணம் - மனிதன் மலத்தை மனிதன் அள்ளும் தடைச் சட்டம் 2003ல் இயற்றப்பட்டாலும், இன்னும் அந்த அவலம் நீடிக்கிறது, கழிப்பறை நம்மைவிட பின்தங்கிய நாடுகளில் திறந்தவெளி மலம் கழிக்கும் சதவீதம் குறைவு.

நாடு முழுவதும் 72 ஆயிரம் மருத்துவமனைகளில் கழிப்பறை இல்லை.

கிராமங்களில் 28.7% கழிப்பிட வசதியில்லை.

6 மாதங்களில் 60 கோடி மக்களுக்கு 21 கோடி கழிப்பறை கட்டியதாக பிரதமர் அறிவிப்பு.

இரு ஒரு மாபெரும் திருப்புமுனை. இதுவரையில் ஆட்சிக்குத் தலைமையேற்றவர்கள் அடிமைக்காலத்தில் பிறந்திருந்தனர். தேசம் சுதந்திரம் பெறுவதற்கு முன்பு பிறந்தவர்கள் தான் இதுவரை இந்த தேசத்தை ஆண்டிருக்கிறார்கள். முதல்முறையாக சுதந்திர இந்தியாவில் பிறந்தவர் தேசத்தின் தலைவராக ஆகியிருக்கிறார். தேசம் அடிமைப்பட்டு கிடந்தபோது பிறந்தவர்களுக்கு தேசத்துக்காகப் போராடும் பாக்கியம் இருந்தது. சுதந்திரம் கிடைத்த பிறகு பிறந்தவர்களுக்கு அந்தக் கொடுப்பினை இல்லை.

ஆனால் தேசத்துக்காக உயிரைத் தியாகம் செய்யும் பாக்கியம் நமக்கு கிடைக்கவில்லையே தவிர தேசத்துக்காக வாழும் பாக்கியம் கிடைத்திருக்கிறது. எனவே தேசத்துக்காக வாழ்வதை நாம் நமது லட்சியமாகக் கொள்ள வேண்டும். மிகச் சிறிய செயலாக இருந்தாலும் அதை தேசத்துக்காகவே செய்வோம். தேசத்தின் அனைத்து மக்களின் மனதிலும் இந்த எண்ணத்தை உருவாக்கிவிட்டால் நாம் நம் நிலையை மேம்படுத்திவிட முடியும். உலகை மாற்றிக் காட்டிவிட முடியும்.

பிரதமர் மோடி அவர்களே,

கங்கா மாதா தான் இந்தப் பொறுப்பை உங்களிடம் ஒப்படைத்திருக்கிறாள் என்று உங்கள் கனவு உரையில் குறிப்பிட்டிருக்கிறீர்கள். அது உண்மையில்லை மோடி அவர்களே. இந்திய தேசத்தின் 33 சதவீத மக்கள் ஏதோ ஒரு நம்பிக்கையில் இந்த பொறுப்பை உங்களிடம் ஒப்படைத்திருக்கிறார்கள் என்பதை முதலில் தாங்கள் உணர வேண்டும். (உங்கள் கட்சியின் மூத்த தலைவர் சுப்பிரமணிய சுவாமி பத்திரிகை செய்தியில் பிஜேபி வெற்றி பெற்றது மோடி அலை அல்ல இந்துத்துவா அலை. மேலும் பிஜேபி தவறுகளை மன்னித்து மக்கள் வாக்களித்துள்ளனர் என்றார்).

மேலும் நீங்கள் செய்து முடிக்க பல விசயங்கள் இருக்கின்றன என நீங்களே சொல்லியிருக்கிறீர்கள், தேசத்திற்காக போராடும் பாக்கியம் கிடைத்திருக்கிறது. மிகச் சிறிய செயலாக இருந்தாலும் அதை தேசத்துக்காகவே செய்வோம். அதன்மூலம் நம்நிலைமையை மேம்படுத்திட முடியும் என்றெல்லாம் உணர்ச்சி பிழம்பில் இருக்கிறது உங்கள் உரை. உண்மையில் அந்த உரை 136 கோடிக்கும் மேற்பட்ட ஒட்டுமொத்த இந்திய மக்களுக்காகவே என்றே இந்திய தேசம் நம்புகிறது. இந்திய மக்களின்

நம்பிக்கை கனவு நனவாக வேண்டுமெனில் மோடி அவர்களே நீங்கள் செய்ய வேண்டியது என்ன?

பிரதமர் மோடி அவர்களே,

நீங்கள் ஏராளமான வாக்குறுதிகளை அள்ளி வீசியிருக்கிறீர்கள். நீங்கள் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றி உள்ளீர்களா? என்ற கேள்விக்கான பதிலை பொறுத்தே இந்த ஐந்தாண்டுகளுக்கு இந்தியாவின் எதிர்காலம் அமையப் போகிறது. மிகப்பெரிய மீட்பர் எனும் பிம்மம் உங்களை சுற்றிக் கட்டப்பட்டுள்ளது. நீங்கள் மீட்பரா அல்லது அந்த பிம்பம் வெறும் நீர்க்குமிழியா என்பது தங்களின் செயல்பாடுகளின் மூலம் ஏற்கனவே தெரிந்துள்ளது. அடுத்த ஐந்தாண்டுகளில் என்ன செய்யப் போகிறீர்கள் என்பது 2வது பிஜேபி ஆட்சியில் தெரிந்துள்ளது.

உதாரணம் - குடியுரிமை சட்டம், முத்தலாக், ஜம்மு-காஷ்மீர் 370 ரத்து, தேசிய மக்கள் பதிவேடு, தேசிய குடிமக்கள் பதிவேடு, ஒரே நாடு ஒரே தளபதி போன்ற சட்டங்களால் நிறைவேற்றப்பட்டது.

அதில் முதலாவது உங்களுக்கு தத்துவப் பின்னணியாக இருக்கும் இந்த அடிப்படைவாத அமைப்புகளின் கட்டளையை மீறி செயல்படுவது. 2002ல் குஜராத்தில் நடைபெற்ற நரவேட்டைக்கு நீங்கள் குறைந்தபட்சம் வருத்தம்கூட தெரிவிக்காத நிலையில் நீங்கள் அடைந்திருக்கும் மாபெரும் வெற்றி மதச்சிறுபான்மையினரை அச்சத்தில் ஆழ்த்திருக்கிறது. எனவே ஒருசிலர் தற்காப்பு என்ற பெயரில் மீண்டும் பயங்கரவாதத்தை நாடக்கூடும். அச்சத்தைக் களையும் ஆகப்பெரும் முதற்கடமை உங்களை சார்ந்ததே. (உ-த தற்போது டில்லியில் கலவரத்தால் 45 உயிர் பலி).

இரண்டாவதாக குஜராத் வளர்ச்சியின் நாயகனாக உருவாக்கப்பட்டவர் நீங்கள். இந்த வெற்றிக்கும் அந்த படிமம் மிகப்பெரிய உதவியை செய்திருக்கிறது. உண்மை நிலை என்ன? ரிசர்வ் வங்கியின் கவர்னர் ரகுராம் ராஜன் விடுத்த வளர்ச்சி குறியீடு மனித வளர்ச்சி குறியீடு உட்பட பல்வேறு அடிப்படைகளில் அளவிடுகிறபோது கேரளா, தமிழ்நாடு ஆகியவற்றைவிட குஜராத் பின்தங்கியிருப்பது மட்டும் அல்ல. முதல் பத்து மாநிலங்களுக்குள் இடம் பிடிக்கவே திணறுவதை பொருளாதார நிபுணர்கள் மறுக்க முடியாத ஆதாரங்களின் அடிப்படையில் நிரூபித்துள்ளனர்.

குஜராத் மாதிரி வளர்ச்சியின் முழுப் பயன்கள் சென்றடைந்திருப்பது சாதாரண மக்களை அல்ல, மாறாக பெரும் முதலீட்டு நிறுவனங்களையே. இந்த உண்மைகள் கார்ப்பரேட் நிறுவனங்களால் கட்டுப்படுத்தப்படும். ஊடகங்களில் குறிப்பாகத் தொலைக்காட்சிகளில் இடம் பெறுவதில்லை என்பதால் மக்கள் குஜராத் மாதிரி உண்மைக்கான அந்தஸ்தை பெற்றுவிட்டது. அதன்பலனை இன்று நீங்கள் பெற்றுள்ளீர்கள். நாடு முழுவதும் இந்த வளர்ச்சியைத் தீர்வாகக் கருதினால் அது பெரும்பான்மை மக்களை வறுமைக்கும் வாழ்நிலையின் கீழ்மட்டத்திற்கும் தள்ளிவிடும். நீங்கள் முன்வைக்கும் வளர்ச்சி யாருக்கானது என்பதை தெளிவுபடுத்த வேண்டியது மோடி அவர்களே உங்களது இரண்டாவது கடமையாக உள்ளது.

மாண்புமிகு பிரதமர் மோடி அவர்களே உங்களின் அமோக வெற்றி பன்முகத் தன்மையுள்ள இந்திய மக்களின் வாழ்க்கையை ஒற்றைத் தன்மையுடையதாக மாற்றுவதாக உள்ளது. மதம், மொழி, பண்பாடு ஆகியவற்றால் வேறுபட்ட இந்திய சமூகங்களை இதுநாள் வரை ஒன்றிணைத்து அதன் மதச்சார்பின்மையும் வேற்றுமையில் ஒற்றுமை காணும் மானிட இணக்கமும்தான் உங்கள் அமைப்பின் அகண்ட பாரதக் கனவை நடைமுறைப்படுத்தும் திட்டத்திற்காக அடிப்படைவாத அமைப்புகள் முன்னிலைப்படுத்தியிருக்கும் கருவியே நீங்கள். உங்கள் செயல்பாடு என்னவாக இருக்கும் என்பதே முதன்மையான கேள்வி. கடந்த ஐந்து ஆண்டுகளில் இந்திய மக்களின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கும் வாய்ப்பு உங்களுக்கு அளிக்கப்பட்டிருந்தும், நீங்கள் உருவாக்கப் போவது பாரதமா? இந்தியாவா? தெளிவுபடுத்துவீர்களா?

(உ-த) இன்று இந்திய தேசம் 71 ஆண்டுகளில் இதுவரை இல்லாத பொருளாதார வீழ்ச்சியை கண்டுள்ளது. 45 ஆண்டுகள் இல்லாத வேலையின்மை ஏற்பட்டிருக்கிறது. உலகில் உள்ள வறுமை நாடுகளில் மூன்றாவது இடம், சொந்த நாட்டில் அகதிகளாக ஆகக்கூடிய நிலை இன்று ஏற்பட்டுள்ளது.

இந்தியப் பிரதமர் மோடி அவர்களின் கனவு அகண்ட பாரதமே என்பதில் எள்ளளவும்

சந்தேகம் இல்லை. அகண்டபாரதம் என்ற முழக்கம் அவர்களின் இந்துத்துவாவுக்காக மட்டுமல்ல அவர்கள் நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கும் உலகமயமாக்கல் கொள்கைப் போக்கின் சமூக ரீதியான எதிர்விளைவுகளை மறைப்பதற்காகவே இன்று அமெரிக்கா உட்பட உலகளாவிய ஏகாதிபத்தியங்களின் நெருக்கடிகளை தீர்க்க இந்தியாவை பலிகடாவாக்கும் முயற்சிகள் தொடங்கி விட்டன. இந்தியப் பிரதமராக நரேந்திர மோடி வர வேண்டும் என்பது இந்திய மக்களின் விருப்பம் அல்ல. அமெரிக்கா தலைமையிலான உலக ஏகாதிபத்தியங்களின் விருப்பமும், பெரும் முதலாளிகளின் விருப்பமும் ஆகும்.

இந்தியா உட்பட பெரும்பாலான நாடுகளின் அரசியல் கொள்கை என்பது அமெரிக்கா தலைமையிலான உலகமயமாக்கல் கொள்கையே ஆகும்.

பலமான ஏகாதிபத்தியம் தனது பரம எதிரியான சோசலிச நாடுகளை பெரும்பாலும் ஒழித்துக் கட்டிவிட்டன. சோசலிச நாடுகளின் வீழ்ச்சி ஏற்படாவிட்டால் நிச்சயம் உலகமயமாக்கலும் இந்தளவிற்கு சாத்தியப்பட்டிருக்காது. இத்தகைய பின்னணியில் இந்தியாவில் அமுல்படுத்தப் பட்டுள்ள உலகமயமாக்கல் கொள்கையின் சில முக்கிய அம்சங்களைப் பார்த்தாலே அதன் லட்சணம் முழுவதும் தெரிந்துவிடும்.

1. பொதுத்துறைகள் படிப்படியாக தனியார் துறையாக மாற அனுமதி அளிக்கப்பட்டது. (உ-த) ரயில்வே, பாதுகாப்பு, வங்கி, இன்சூரன்ஸ் தனியார்மயம் இயற்றப்பட்டுள்ளது.

2. பல தொழில்கள் உரிமம் பெற்றுத்தான் நடத்தப்பட வேண்டும் என்ற அரசின் கட்டுப்பாட்டை உடைத்து தனியார்களுக்கு பல தொழில்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டது.

3. அந்நிய முதலீடுகள் பெருவாரியாக அனுமதிக்கப்பட்டது.

4. அரசின் கடுமையான சட்டங்கள் இனி பெரும் தொழில் முதலீடுகளுக்குள் பொருந்தாது என அறிவிப்பு.

5. பொதுத்துறைகளைக் கைகழுவுவது இவற்றின் முதலீடுகள் திரும்ப பெற்று அவற்றை தனியார் துறைக்கே விட்டுவிடுவது என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

6. இறக்குமதிகளுக்கு முன்னுரிமை என்றாக்கப்பட்டது.

7. தொழிலாளர் நலச் சட்டங்களை 4ஆக குறைப்பது.

மேற்கண்ட மத்திய அரசின் பொருளாதாரக் கொள்கை காட்டுவது என்ன? இந்திய முதலாளிகள் பெருகட்டும் என்பது மட்டுமல்ல, பன்னாட்டு முதலாளிகளும் பெருகட்டும் என்பதுதான் இந்த உலகமயமாக்கல் கொள்கையின் உயிரோட்டமாகும். இத்தகைய உலகமயமாக்கல் கொள்கைகளை அமுலாக்கிய உலகின் பல்வேறு நாடுகள் ஏராளமான பிரச்சனைகளை சந்தித்து வருகின்றன.

(உ-த) பிஜேபி ஆட்சியில் வாராக்கடன் ரூ.10 லட்சம் கோடி. கடந்த 6 ஆண்டுகளில் முதலாளிகளுக்கு ரூ.5 லட்சம் கோடி வாராக் கடன் ரத்து. 2 ஆயிரம் வங்கிக் கிளைகள் மூடத் திட்டம்.

ஒவ்வொரு அரசாங்கமும் உலக வங்கி, ஐஎம்எப் போன்றவற்றிடம் இருந்து வாங்கும் கடனுக்கு ஈடாக அந்நாட்டு வரி வசூலிப்பை உத்தரவாதமாகக் கொடுக்கிறது. வரி மக்களிடமிருந்து வசூலிக்கப்படுகிறது. அதாவது கடனுக்கு மறைமுகமான உத்தரவாதம் அந்நாட்டின் ஒவ்வொரு பிரஜையுமே ஆகும். உலகத்திலுள்ள மக்கள் அனைவரும் தங்கள் வாழ்க்கை முழுவதும் இந்த பன்னாட்டு வங்கிகளுக்காக உழைத்து வட்டியாகவும், வரியாகவும் கட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

நம் நாடு வாங்கியுள்ள கடனுக்கு இந்திய பிரஜை என்ற அடிப்படையில் நாம் ஒவ்வொருவரும் பொறுப்பேற்கிறோம். அதாவது நாம் சுதந்திரமான மனிதர்கள் அல்ல. கடன் அடையும் வரை தாம் அடிமைகள். பொதுவாகத் தங்கம் வீடு சொத்து போன்ற ஈடு வைக்கும் பொருளுக்கான முழு விபரங்கள் கொடுக்கப்படுவதைப் போல் ஈடு பொருளாகிய நம்மைப் பற்றி விபரங்களும் சமர்ப்பித்தாக வேண்டும். மக்கள் தொகை கணக்கெடுப்பு, வாக்காளர் பட்டியல், ஆதார் கார்டு, பான் கார்டு போன்றவை அத்தகையவையே ஆகும்.

இறப்புச் சான்றிதழ் அடிமைப் பட்டியலில் இருந்து நாம் நிரந்தரமாக நீக்கப்பட்டு விட்டோம் என்று அறிவிப்பதற்காகவே அதேபோல் பிறப்புச் சான்றிதழ் நாம் அடுத்த அடிமைகளை உருவாக்கி இருக்கிறோம் என்ற விவரத்தைச் சொல்லவே

ஆகும். இந்தத் திசைவழியில் இந்தியா ஏறக்குறைய 30 ஆண்டுகளை கடந்துள்ளது. ஆக இந்தியாவின் இன்றைய பொருளாதார நெருக்கடிகளுக்கான காரணம் இங்கு அமுலாக்கப்பட்ட உலகமயமாக்கல் கொள்கைகளே.

இத்தகைய சூழலில்தான் இன்றைய நெருக்கடியிலிருந்து இந்தியாவை மீட்டு வந்த ஸ்பைடர்மேன், சூப்பர் ஹீரோவாக மோடி முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளார் என மக்களுக்கு சூப்பர் ஹீரோக்களின் மீது இவ்வளவு நம்பிக்கை. உலகில் உள்ள எல்லா மதங்களும் நன்மை தீமையை வெற்றி கொள்வதைப் பற்றியே பேசுகின்றன. அதர்மம் தலைதூக்கும்போது தர்மத்தை நிலைநாட்ட கடவுள் தூதுவர் வருவார். இந்த நம்பிக்கை கிட்டத்தட்ட எல்லா மதங்களிலும் இருக்கிறது. அத்தகைய நம்பிக்கைக் கதைகளைத்தான் இந்திய மக்கள் புராணங்களில் கேட்டிருக்கிறார்கள். அனைவருக்கும் அத்தகைய கதைகள் பிடித்திருக்கின்றன. எனவேதான் சமூகத்தில் நீதியை நிலைநாட்ட வரும் சூப்பர் ஹீரோக்களை எந்தக் கேள்வியுமின்றி ஏற்றுக் கொள்கிறார்கள்.

பொதுவாக சூப்பர் ஹீரோ ஒரு சராசரி மனிதனாக மக்களோடு மக்களாக உலவிக் கொண்டிருப்பார். எப்போதெல்லாம் தேவைப்படுகிறதோ அப்போது மட்டும் சூப்பர் ஹீரோ அவதாரம் எடுப்பார். சமூகத்திற்கு பிரச்சனை வரும்போதெல்லாம் சூப்பர் ஹீரோ போல யாராவது ஒருவர் நம்மைக் காக்க வருவார் என்ற நம்பிக்கை மக்களின் மனங்களில் விதைக்கப்பட்டு இருக்கிறது. அப்படி ஒரு சூப்பர் ஹீரோவாக இன்று மோடி உருவாக்கப்பட்டுள்ளார். சூப்பர் ஹீரோ மோடியால் இந்தியாவின் இன்றைய பிரச்சினைகளுக்கு தீர்வினை உருவாக்க முடியுமா?

இன்றைய இந்தியாவின் பிரச்சனை திரைப்படமல்ல. அது நிஜ மனிதர்களின் நிஜ வாழ்க்கை. அவற்றிற்கு உரிய தீர்வினைக் காண சரியான பொருளாதாரக் கொள்கைகளும் அரசியல் நிலைபாடுகளுமே தேவை. சூப்பர் ஹீரோக்கள் அல்ல. அந்த வகையில் பார்க்கும்போது மோடியிடமும், பாரதிய ஜனதா கட்சியிடமும் மாற்றுத் திட்டம் மாற்றுக் கொள்கை என்ன இருக்கிறது? அதே உலகமயமாக்கல் கொள்கைதான் இவர்களின் தாரக மந்திரமாக உள்ளது. பன்னாட்டு முதலாளிகளுக்கும் இவர்கள் ஒன்றும் எதிரானவர்கள் அல்ல.

இரண்டாம் உலகப் போருக்கு அடிப்படையாக இருந்த ஜெர்மனியின் ஹிட்லர் மாபெரும் சர்வாதிகாரி என்று உலகம் முழுவதும் தூற்றப்பட்டார். ஆரிய இனமே வாழத் தகுந்தது வேறினங்கள் எல்லாம் அழிய வேண்டியவையே என பாசிச ஒடுக்குமுறையை உலகம் முழுக்க பரப்புவதே ஹிட்லரின் கொள்கையாக இருந்தது. ஆனால் அவனை அந்த நிலைக்குக் கொண்டு வந்தது, அந்நாட்டின் ஆளும் வர்க்கங்களான முதலாளி வர்க்கங்களே ஆகும். இத்தவறான பொருளாதாரக் கொள்கையின் விளைவாக எழுந்த பொருளாதார நெருக்கடிகளே ஹிட்லரைத் தூண்டிவிட்டன என வரலாறு பதிவு செய்துள்ளது.

இந்தியா இன்று சந்தித்துவரும் அல்லது எதிர்காலத்தில் மேலும் அதிகமாக சந்திக்கவுள்ள நெருக்கடிகளுக்கு காரணம் இந்திய அரசு கடைப்பிடிக்கும் தவறான பொருளாதாரக் கொள்கைகளே. இன்று இந்திய நாடாளுமன்ற அரசுக் கட்டிலில் அமர விரும்பும் எந்தக் கட்சியும் (இடதுசாரி கட்சிகளை தவிர்த்து) உலகமயமாக்கலுக்கு எதிரான மாற்றுக் கொள்கையை, மாற்றுத் திட்டத்தை கொண்டிருக்கவில்லை.

இந்நிலையில் பன்னாட்டு முதலாளிகள் லாபவெறி மற்றும் பொருளாதார முறைகள்தான் அரசு பயங்கரவாதத்திற்கான அடிப்படை என்றும், அதுவே பாசிச உருவாக்கத்திற்கான அடிப்படைகள் என்பதும் சுட்டிக்காட்டப்படும் போதுதான் இத்தகைய நாசகரக் கொள்கைகளுக்கு முடிவு கட்ட முடியும். அதற்கான முயற்சிகளில் புதிய புதிய வடிவங்களில் மாற்றுக் கொள்கையை முன்னிறுத்தி போராடி வரும் இயக்கங்களோடு இணைந்து மக்களை நோக்கி பயணிக்க வேண்டியது தொழிற் சங்கங்களின் பிரதான கடமையாகும்.

கனவுகள் தொலைதூரத்தில்தான்
அடைவதற்கான பயணமும் நெடியதுதான்
மீட்சிக்கான அயராத உழைப்புடன்
நெஞ்சுறுதியோடு தொடரும்
பயணங்களினால்தான்
மானுடவாழ்வு புவியில் தடம் பதித்து
மேலெழுந்திருக்கிறது
தொடர்வோம் உரிமை முழக்கங்களோடு...❖

# சுதந்திரத்திற்கு பிறகும் சரண்டப்படும் இந்தியா

**1947**-ல் இந்தியா சுதந்திரமடைந்துவிட்டது. ஒருபக்கம் நாட்டின் குடிமக்கள் சுதந்திர காற்றை சுவாசித்துக்கொண்டிருந்தபோது, மறுபக்கம் வெள்ளையர்களால் முற்றிலும் சுரண்டப்பட்டிருந்த நமது நாட்டின் பொருளாதாரம் மிகப்பெரிய கேள்விக்குரியாக இருக்க அப்போதய பிரதமர் நேரு உள்பட அனைத்து தலைவர்களும் கவலையோடு இந்தியாவை புனரமைக்க வேண்டியிருந்தது. மேலும் வறுமையும், பட்டினித் திண்டாட்டமும் நிலைமையை மேலும் மோசமாக்கி கொண்டிருந்தது. உடனடியாக மக்களின் பசியை போக்கவும், நாட்டின் முன்னேற்றத்திற்கு அடித்தளம் விவசாயத்தின் வளர்ச்சியே என அனைவரின் ஒருமித்த கருத்தாக இருந்தது.

ஆனால் விவசாயத்தில் உடனே பயன் தரக்கூடிய அளவிலான நவீன கருவிகள் நம்மிடம் இல்லை. அப்போது மேலைநாடுகளில் விவசாயத்தில் தொழிற்புரட்சி ஏற்பட்டு நவீன கருவிகள் விவசாயத்தில் பயன்படுத்தப்பட்டு அவை விவசாயத்தில் தன்னிறைவை அடைந்திருந்தன. அவர்களிடம் கையேந்தினால் நம்நாடு மீண்டும் அந்நியரிடம் அடிமைப்பட்டு விடுவோமோ என்ற அச்சத்தில் அப்போதைய பிரதமர் நேரு இதில் ஒரு முக்கிய முடிவு எடுத்தார். அதுதான் "Socialist Society" என்பது. அரசாங்கத்தின் பங்கும் தனியாரின் பங்கும் சேர்த்து முதலில் தொழிற்ச ாலைகளை அமைப்பது எனவும், அதன் மூலம் விவசாயத்தை நவீனப்படுத்திவிடலாம் என்று முடிவெடுக்கப் பட்டதின் விளைவாக பொதுத் துறை நிறுவனங்கள் கொண்டுவரப்பட்டன. இந்த பொதுத்துறை நிறுவனங்கள் இந்தியாவின் திருக்கோயில்கள் (Temples of Modern India) என்று வர்ணிக்கப்பட்டது. ஏன் பொது துறை நிறுவனங்கள் இந்தியாவின் திருக்கோயில்கள் என்று வருணிக்கப்பட்டது? மக்கள் தங்கள் குறைகளை தீர்க்க திருக்கோயிலை நாடுவது போல் நாட்டின் குறைகளாக இருந்த வேலையின்மை, வறுமை, சுகாதாரம், மருத்துவம், கல்வி போன்றவற்றிக்கு உதவ இதன் வருமானம்



வழிவகை செய்ததால் அவ்வாறு அழைக்கப்பட்டது .

*1962*-ல் எதிர்பாராதவிதமாக சீனா நம் நாட்டின் மீது போர் தொடுத்தபோது நம்மிடம் நவீன போர் தளவாடங்கள் இல்லை. இராணுவத்திற்கென பெரிய அளவில் நிதி ஒதுக்காததால் சீனப்போரில் தோல்வி கண்ட இந்தியா பொருளாதாரத்திலும் பெரும் சரிவை கண்டது. வேளாண்மையில் வளர்ச்சிகாணும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட நமது பொருளாதாரம் 1964 இல் நேரு இறந்த பிறகு மேலும் சீர்குலையத் தொடங்கிவிட்டது. 1965-ல் இந்தியா பாகிஸ்தான் போரின்போது அமெரிக்கா பாகிஸ்தானுக்கு சார்பாக தலையிட்டு இந்தியாவிடம் "போரை நிறுத்துங்கள் அல்லது பி.எல் 480 ஒப்பந்தத்தின் மூலமாக இந்தியாவிற்கு அனுப்பப்படும் உணவு தானியங்களை நிறுத்திவிடுவோம்" என்று அப்போதைய பிரதமர் லால் பகதூர்சாஸ்திரியிடம் மிரட்டல் விடுத்தது. உணவுக்காக போரை இந்தியா நிறுத்திவிடும் என்று நினைத்துக்கொண்டிருந்த அமெரிக்காவின் நரிதந்திரத்திற்கு இடி விழுந்ததுபோல் இந்தியா பி.எல் 480 ஒப்பந்தத்தை நிறுத்திவிட்டு மேலும் போரை தொடர்ந்தது. அதற்கு சாஸ்திரி இந்திய மக்களிடம் நாட்டின் பொருளாதாரத்தையும் கௌரவத்தையும் காப்பாற்ற வைத்த வேண்டுகோள் "Skip a Meal Scheme" (ஒருவேளை உணவை விட்டுக்கொடுங்கள்) என்று கோரிக்கை வைக்கப்பட்டது. இந்த நெருக்கடி

பசுமை புரட்சிக்கு வித்திட்டது. இதன் காரணமாக பசுமை புரட்சியின்போது அறிமுகப்படுத்தப்பட்ட கலப்பின வகை விதைகள் சரியான ஆய்வுக்குட்படுத்தப்படாமல் பயன்படுத்தப்பட்டது. இதன் விளைவாக உணவு உற்பத்தியில் தன்னிறைவை அடைந்தாலும், அதை மக்களிடம் கொண்டு சேர்ப்பதில் சரியான திட்டமிடுதல் இல்லையெனலாம். மேலும் ஆய்வுக்குட்படுத்தப்படாமல் பயன்படுத்தப்பட்ட கலப்பின விதைகள் விவசாயத்தையும், இயற்கை வளங்களையும் சீர்குலைத்தது. ஹரியானா, பஞ்சாப் போன்ற மாநிலங்கள் மிகப்பெரிய பாதிப்புக்குள்ளாகின. இந்தியா விவசாயத்தில் முன்னேற்றம் என்று எதிர்நோக்கிக் கொண்டிருந்தபோது மிகப்பெரிய பின்னடைவை சந்தித்தது. இது நாட்டின் அரசியல் சூழ்நிலைகாரணமாகவும் வளைகுடா நாடுகளின் போர் காரணமாக உலகம் சந்தித்த பொருளாதார மந்த நிலை காரணமாகவும் நமது நாட்டின் பொருளாதாரம் அதலபாதாளத்திற்கு சென்றது. இதை பயன்படுத்திக்கொண்ட ஐ.எம்.எப் உலக பொருளாதாரத்திற்கு இந்திய சந்தையை திறந்துவிட இந்தியாவிற்கு நெருக்கடி கொடுத்தது. இந்த சமயத்தில் தான் நாட்டின் திருக்கோயில்கள் என்று வர்ணிக்கப்பட்ட பொதுத்துறை நிறுவனங்கள் ஒவ்வொன்றாக தனியாருக்கு தாரைவார்க்க ஆரம்பித்தது.

உலக வங்கி, ஐ.எம்.எப் ஆகியவற்றுடன் இணைந்து செயல்படக்கூடிய உலக வர்த்தக நிறுவனம் வளரும் நாடுகளில் காட் ஒப்பந்தத்தை அமுல் படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட நிறுவனமாகும். உலக வர்த்தக நிறுவனம் ஐ.நா. அமைப்புக்குள் வராது. உலக வர்த்தக நிறுவனத்தின் இயங்கு முறைகள் பெரும்பாலும் இரகசியமாகவே இருக்கும். எனவே மேல்நிலை வல்லரசுகள் உலக வர்த்தக நிறுவனத்தில் தங்களுக்குள் இரகசிய உடன்பாடு செய்துக்கொண்டு தனியார் முதலாளித்துவத்தை வளரும் நாடுகளின்மேல் திணிக்கும். வர்த்தக ஒருங்கிணைப்பு எனும் பெயரால் காட் ஒப்பந்தமும், உலக வங்கி, ஐ.எம்.எப். ஆகியவற்றோடு சேர்த்து உலக வர்த்தக நிறுவனமும் வளரும் நாடுகள் பின் தங்கிய நாடுகளின் மீது ஆதிக்கம் செலுத்தி உறிஞ்சிக்கொழுக்க தொடங்கியது. இந்தியாவின் பொருளாதாரத்திற்கே அடித்தளமாக இருந்த பொதுத்துறை நிறுவனங்கள் என்கிற கோயில்களை அழித்தால்தான் குறைதீர வழிகிடைக்காமல் பன்னாட்டு வர்த்தகத்திற்கு இந்தியச் சந்தையை திறக்கமுடியும் என்பதை உணர்ந்த அப்போதய அரசு பன்னாட்டு முதலாளிகளுக்கு ஆதரவாக மெல்ல மெல்ல பொது துறை நிறுவனங்களுக்கு பட்ஜெட்டில் நிதி ஒதுக்குவதை குறைத்தது. அந்நிறுவனங்கள் நட்டத்தில் இயங்க ஆரம்பித்தது.

சுதந்திர இந்தியாவை இதுவரை ஆண்ட காங்கிரசும் தற்போது ஆண்டுக்கொண்டிருக்கும் பிஜேபி அரசும் ஏகாதிபத்திய எஜமானர்களுக்கு தங்களது விசுவாசத்தை காண்பிப்பதிலும் அவர்களது நம்பிக்கையை பெறுவதிலும் இருவருமே சளைத்தவர்கள் அல்ல. ஆனால் காங்கிரஸ் ஆட்சியில் ஆட்டம் கண்டிருந்த இந்திய பொருளாதாரமானது மன்மோகன் சிங் பிரதமாராக இருந்தபோது தாக்குபிடிக்கப் பட்டாலும் அடுத்து வந்த பிஜேபி அரசு தனது தவறான பொருளாதாரக்கொள்கைகள் மூலம் மேலும் சீர்குலைத்துவிட்டது. பணமதிப்பிழப்பு நடவடிக்கை மூலமாகவும், ஜிஎஸ்டி என்கிற ஒரே வரிவிதிப்பு மூலமாகவும் மக்கள் வாங்கும் திறன் குறைந்து சிறு, குறு நிறுவனங்கள் முதல் கார்உற்பத்தி செய்யக்கூடிய பெரிய நிறுவனங்கள் வரை உற்பத்தி பொருட்களை விற்பனை செய்ய முடியாமல் நிறுவனங்களை மூடும் அபாய நிலைக்கு கொண்டுவந்து பல்லாயிரக் கணக்கானோர் வேலையின்றி நடுத்தெருவில் நிற்கும் நிலைக்கு தள்ளப்பட்டனர்.

2019ஆம் ஆண்டின் உலக பெரும் பணக்காரர்கள் பட்டியலை ஹூருன் குளோபல் நிறுவனம் வெளியிட்டுள்ளது. அதன் நிலவரப்படி உலக பெரும் கோடீஸ்வரர்களின் பட்டியலில் முதல் 10 இடங்களுக்குள் இந்தியர்கள் இடம்பிடித்துள்ளனர். அதே சமயத்தில் ஒருவேளை உணவு கிடைக்காத ஏழைகளும் ஊட்டசத்து குறைபாடு காரணமாக குழந்தைகள் இறப்பும் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. இந்த பொருளாதார ஏற்றத் தாழ்வென்பது இந்தியா ஒரு சோஸலிஸ்ட் சொஸைட்டி என்பதற்கு மாறாக கேப்டலிஸ்ட் சொஸைட்டியாக மாறியிருக்கிறது என்பது மறுக்க முடியாத உண்மை. 1920களில் முதலாளித்துவத்திற்கு எதிராக தோன்றிய ரஷ்யப் புரட்சியும் அதனால் தோன்றிய தொழிலாளர் புரட்சியும், இந்திய தொழிலாளர்களுக்கு புத்துணர்வு அளித்தாலும் உலக அளவில் ஏற்படுத்தப்பட்ட பன்னாட்டு தொழிலாளர்

அமைப்பு தொழிற்சங்கங்களை பாதுகாத்தாலும் இந்தியாவில் தொழிலாளர்கள் போராடி பெற்ற உரிமைகளை நசுக்கும் விதமாக முதலாளித் துவத்திற்கு ஆதரவாக தொழிலாளர் நல சட்டங்களில் திருத்தம் கொண்டுவரப்பட்டு 44 ஆக இருந்த சட்டத்தினை 4 ஆக சுருக்கிவிட்டது.

தற்போது ஆளும் மத்திய அரசின் தவறான பொருளாதாரக் கொள்கை காரணமாக கடந்த 45 ஆண்டுகளில் இல்லாத அளவு பொருளாதார நெருக்கடியை சந்தித்தாலும் ஒருபுறம் முதலாளித்துவத்திற்கு ஆதரவாக இந்தியாவின் பொது துறை நிறுவனங்கள் நட்டத்தில் இருப்பதாகக் கூறி அவற்றை விற்பதும், லாபத்தில் இயங்கக்கூடிய பாரத் பெட்ரோலிய நிறுவனம், எல்.ஐ.சி, இரயில்வே ஆகிய துறைகளை தனியாருக்கு விற்கக்கூடிய வேலையையும் செய்துக்கொண்டு மறுபுறம் மக்களின் சிந்தனைகளை முடக்கக்கூடிய வகையில் சாதி, இன, மத, மொழி பிரச்சினைகளை தூண்டிவிட்டு மக்களை பிரித்தாளும் சூழ்ச்சி செய்து கொண்டிருக்கிறது. தகவல் தொடர்புத்துறையின் அரசு நிறுவனமான பி.எஸ்.என்.எல் நட்டத்தில் இயங்கியதும், அதன் தொழிலாளர்கள் 79000-ம் பேர் (கட்டாய) விருப்ப ஓய்வு திட்டத்தில் சென்றவர்களுக்கு ஓய்வுகால பலன்கள் அளிக்கவில்லை. ஆனால் தனியார் தொலைபேசி நிறுவனங்களுக்கு சலுகைகள் அள்ளி வழங்கப்படுகிறது.

அரசியல் சாசனம் பிரிவு 47 குடி மக்களுக்கு இலவச கல்வி, மருத்துவம், சுகாதாரம் வழங்க வேண்டும் என்கிறது. ஆனால் தறபோதய நிலை என்ன? கல்வி தனியார் மயம், அரசு மருத்துவ மனைகள் பப்ளிக் பிரைவேட் பார்ட்னர்ஷிப் என்ற பெயரில் தனியார்மயம் என அனைத்திலும் தனியார் மயத்தை வலுக்கட்டாயமாக புகுத்தி வருகிறது. ஒருபக்கம் உலகநாடுகள் வியக்கும் அளவிற்கு விண்ணில் ராக்கெட்களை ஏவி டிஜிட்டல் இந்தியா என பிதற்றிக்கொண் டிருந்தாலும் மறுபக்கம் ஆழ்துளை குழாயில் விழுந்த பிஞ்சுக்குழந்தைகளை மீட்க நவீனத்துவம் இல்லை.

நாட்டில் வேலையில்லா திண்டாட்டமும், வறுமையும் தலைவிரித்தாடுகிறது. பொருளாதார நெருக்கடியால் வேலையிழப்போரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துவருகிறது. இந்தியாவை இது வரை ஆண்ட அரசுகளும் இப்போது ஆண்டுக்கொண்டிருக்கும் அரசும் முதலாளித்துவத்தின் நுகத்தடியில் பூட்டப்பட்டவையாக தான் இருக்கின்றன. டாக்டர் அப்துல்கலாம் அவர்கள் இந்தியா 2020-ல் வல்லரசாகும் என்று கனவு கண்டார். ஆனால் உண்மை நிலை என்ன? இந்தியா சுதந்திரமடைந்தபோது என்ன நிலையில் இருந்ததோ அதே நிலையில்தான் நாட்டில் வேலையில்லா திண்டாட்டமும், வறுமையும் இன்றும் நீடிக்கிறது. இந்தியாவை ஆண்ட மன்னர்கள் இந்தியா விவசாயத்திற்கான வளமிக்கது என கண்டறிந்து விவசாயத்திற்காக நிதியை செலவிட்டு ஆறு, குளங்கள், கண்மாய்கள், கால்வாய்கள் வெட்டி விவசாயத்தை வளர்த்தார்கள். அவர்களது கஜானா என்று சொல்லப்படுகிற கருவூலம் நிரம்பி வழிந்தது. அவர்களுக்குப்பிறகு நம்மை அடிமைப்படுத்திய வெள்ளையனும் இந்தியா ஒரு விவசாயத்தை அடிப்படையாக கொண்ட நாடாக இருந்தாலும் நெல் கோதுமை போன்றவற்றை விளைவித்தால் இந்தியர்களிடமே கொடுக்க நேரிடும் எனக்கருதி அவனது சுரண்டல் மூளைக்கேற்ப தன்நாட்டிற்கு தேவையான தேயிலை போன்ற பயிற்களை விளைவித்து தனது நாட்டின் கஜானாவை நிரப்பினான். ஆனால் இந்தியா சுதந்திரம் அடைந்தவுடன் விவசாயத்திற்கு முக்கியத்துவம் அளிக்காமல் பன்னாட்டு முதலாளிகளின் சுரண்டலுக்காக இந்திய இயற்கை வளங்களையும் மனித வளங்களையும் தாரைவார்த்துக் கொண்டிருப் பதையும், தங்களது அரசியல் ஆதாயத்துக்காக இன, மத, மொழிவாரியாக நம்மை பிரித்து வைத்திருப்பதையும் இன்னும் எத்தனை ஆண்டு காலம் சகித்துக்கொண்டிருப்போம். பணக்காரன் மேலும் மேலும் உலக பணக்காரனாகவும் ஏழை மேலும் மேலும் பரம ஏழைகளாகவும் மாறிக்கொண்டிருக்கிறார்கள். மக்கள் சக்தி மகத்தானது என மக்கள் உணரவேண்டும். தேசத்தின் இறையாண்மையை காக்க பிற்போக்கு சக்திகளை தூக்கியெறியவும், இடதுசாரி சிந்தனை கொண்ட முற்போக்கு சக்திகளின் பின்னே தேசபத்த உணர்வுடன் ஓரணியில் மக்களை ஒன்று திரட்டவும் வேண்டும். இந்த மாற்றத்தின் மூலம் தான் இந்தியாவை வளர்ச்சிப்பாதையில் கொண்டுசெல்ல முடியும்.

- **தெ. வாசுகி**

❖

# பகத்சிங்கின் தனிச்சிறப்பு

"**வி**ழிப்படைந்து வந்த மக்களுடன் இப்படிப்பட்ட ஆழமான தொடர்பை மற்ற எந்த ஒரு புரட்சியாளரும் வைத்திருக்கவில்லை. பகத்சிங் போல வேறு எவரும் பொது மக்களுக்கும் இளைஞர்களுக்கும் அன்புக்குரியவர்களாக இல்லை. டெல்லியின் சட்டசபையில் ஒரு குண்டை வீசிய பிறகு அவர் எழுப்பிய முழக்கத்தால் அவர் தனது போராட்டத்தை அடையாளப்படுத்தினார். 'புரட்சி ஓங்குக' என்ற முழக்கம் இந்திய மக்களுக்கு அந்த நேரத்தில் அறிமுகம் இல்லாத ஒன்றாக இருந்தது. சந்தேகத்திற்கு இடமின்றி கம்யூனிஸ்ட் தலைமை சிறிது காலம் முன்பே இம்முழக்கத்தை எழுப்பியது. ஆனால் மக்களைச் சென்றடையவில்லை. பிரிட்டிஷ் ஆட்சியின் மீதான வெறுப்பை, மிகப்பெரிய தனிநபர் துணிகரச் செய்கையுடன் பகத்சிங் இணைத்தார். போராடும் தேசத்தின் அடையாளமாகவும், அந்நிய ஆட்சிக்கு எதிரான அதன் வெறுப்பின் வடிவமாகவும் மாறினார்."

பகத்சிங் குறித்த கம்யூனிஸ்ட் தலைவர் பி.டி.ரணதிவேவின் அனுமானம் சரியானது என்பதை காலம் கணித்தது. பகத்சிங் முன்வைத்த முழக்கமான 'இன்குலாப் ஜிந்தாபாத்' (புரட்சி ஓங்குக) என்பது சுதந்திரப் போராட்டத்தின்போது எழுப்பப்பட்ட பலவிதமான முழக்கங்களுள் நிலைத்து நின்ற ஒரு முழக்கமாக நீடித்தது தற்செயலானதல்ல. இன்றளவும் நாட்டில் அனைத்து அரசியல் கூட்டம் அல்லது ஆர்ப்பாட்டம் இந்த முழக்கத்துடன் துவங்குகிறது, முடிகிறது.

இந்துஸ்தான் குடியரசு சங்கம் (எச்.எஸ்.ஆர்.ஏ.) துவக்கப்பட்டபோது 1928 செப்டம்பர் 8 அன்று டெல்லியில் ஃபெரோஸ்ஷா கோட்லா மைதானத்தில் இரகசிய கூட்டத்தில் பல முடிவுகள் எடுக்கப்பட்டன. மக்களுடன் அடையாளப்படுத்திக் கொள்ளும் பேராவல் இவற்றில் உறுதிப்படுத்தப்பட்டது. புதிய அமைப்பு தத்துவார்த்த ரீதியில் சோஷலிசத்தின் இலக்கைப் பின்பற்றியது. கூட்டுத் தலைமை ஒன்றையும் உருவாக்க முடிவு செய்தது. தனிநபர் சாகசவாதத்தை மேற்கொள்ளாது என்றும் ஆனால் அரசியல் ரீதியாக மக்களைத் தூண்டும் செயல்களை மட்டும்



மேற்கொள்ளும் என்றும் தீர்மானித்தது.

பகத்சிங்கால் வழிநடத்தப்பட்ட எச்.எஸ்.ஆர்.ஏ. உணர்ந்த புரட்சியின் நோக்கத்தைப் பொறுத்தவரையில் 'ஏ சர்வாதிகாரமே எச்சரிக்கை' என்ற துண்டுப்பிரசுரங்கள் பின்வருவனவற்றைத் தெள்ளத் தெளிவாகக் காட்டியது. "ஒரு மனிதனின் ரத்த சிந்துதல்களுக்கு வருந்துகிறோம். ஆனால் மனிதன் மனிதனால் சுரண்டப்படுவது முடியாது செய்து அனைவருக்கும் சுதந்திரத்தைக் கொண்டு வரும் புரட்சியின் பலி பீடத்தில் தனி தனிநபர்களின் தியாகங்கள் தவிர்க்க முடியாதது".

"செவிடர்களைக் கேட்கச் செய்வதற்காக" என்று சொல்லப்பட்ட துண்டுப்பிரசுரங்களை பகத்சிங்கும் பி.கே.தத்தும் மத்திய சட்டசபையில் 1929 ஏப்ரல் 8 அன்று குண்டுகளுடன் வீசினர்.

"குண்டுகளை எறிவதென்பது எவரையும் கொல்லவோ அல்லது காயப்படுத்தவோ உத்தேசிக்கப்பட்டதல்ல; இது எந்த ஒரு தனி மனிதருக்கு எதிராகவும் நடத்தப்பட்ட தாக்குதல் அல்ல. ஆனால் ஒரு நிறுவனத்திற்கெதிரானது " இவ்வாறு பொதுவாக புரிந்து கொள்ளப்பட்டுள்ள

பயங்கரவாதத்திலிருந்து அடிப்படையில் வேறானது. 1929 ஜுன் 6 அன்று செஷன்ஸ் கோர்ட்டில் பகத்சிங்கால் தயாரிக்கப்பட்டு, அவரது வக்கீல் ஆசப் அலியால் படிக்கப்பட்ட, பகத்சிங்கும் பி.கே.தத்தும் கொடுத்த வாக்குமூலங்கள், புரட்சி யின்மீது அவரது கருத்தை இன்னும் தெளிவாக்கியது.

பகத்சிங் தமது வாக்குமூலத்தில் ஏகாதிபத்திய சட்டத்தின் இரண்டு அருவெறுப்பான பகுதிகளான பொதுப்பாதுகாப்பு மசோதா மற்றும் தொழில் தகராறு மசோதா ஆகியவற்றைப் பற்றி குறிப்பிட்டார். மற்றொரு முக்கியமான ஆதாரமாக மூன்றாம் அகிலத்திற்கு அனுப்பப்பட்ட தந்தி வாசகம் இருந்தது."லெனின் தினத்தன்று, மகத்தான லெனினின் கருத்துக்களை முன்னே கொண்டு செல்ல சிலவற்றை செய்யும் அனைவருக்கும் நாங்கள் இதயம் கனிந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். ரஷ்யா நிறைவேற்றிக் கொண்டிருக்கும் பெரிய சோதனைகள் வெற்றி பெற வாழ்த்துகிறோம். நாங்கள் எங்கள் குரலையும் அகில உலக தொழிலாளர் வர்க்க இயக்கத்துடன் இணைக்கிறோம்.

பாட்டாளி வர்க்கம் வெல்லும்; முதலாளித் துவம் தோற்கடிக்கப்படும்; ஏகாதிபத்தியத்திற்கு மரணம்."

மேலும் பகத்சிங் தமது கடிதத்தில்,

"புரட்சி என்பது நடைமுறையில் இருக்கும் சமூக அமைப்பை முற்றிலுமாக தூக்கி எறிவதும் அதற்குப் பதிலாக சோஷலிஸ்ட் அதிகாரத்தை வைப்பதுமாகும். அந்த நோக்கத்திற்காக அதிகாரத்தைப் பெறுவது என்பதே நமது உடனடி குறிக்கோள். அது நமது உயர் லட்சியத்தை

நிறைவுறச் செய்வதற்காக அதாவது ஒரு புதிய மார்க்சிய அடிப்படையிலான சமூக மறு கட்டு மானத்துக்காக அவசியம்." எனக் குறிப்பிடுகிறார்.

பிரிட்டிஷ் அரசோடு எப்போதெல்லாம் காங்கிரஸ் பேச்சுவார்த்தை தொடங்குகிறதோ அப்போதெல்லாம் இரு தரப்புக்குமிடையில் பகத்சிங்கின் உடல் வைக்கப்படும் என்று நேரு அறிவித்தார். ஆனால் பகத்சிங்குக்கும் அவரது தோழர்களில் இருவருக்கும் தூக்கு தண்டனை அளிக்கப்பட்ட பிறகு, அன்றைய கராச்சி கூட்டத் தொடரில் காந்தி இர்வின் ஒப்பந்தம் உறுதிப்பாட்டிற்கு வந்தபோது எந்த விதமான முணுமுணுப்புமின்றி கையெழுத்திட்ட நபர்களில் நேருவே முதலாவதாக இருந்தார். நேரு நல்லதில் மையவாதியாகவும் கெட்டதில் சந்தர்ப்பவாதியாகவும் இருந்தார் என்று இந்தியர்களால் வெளியிடப்பட்ட லண்டன் சிறுபத்திரிகை ஒன்று பட்டம் சூட்டியது.

1931 மார்ச் 23ல் தூக்கிலிடப்பட்டதற்குப் பிறகு நாடு முழுவதும் 3 நாட்கள் பகத்சிங் ராஜகுரு சுகதேவ் ஆகிய 3 தியாகிகளுக்கும் ஒவ்வொரு வருக்கும் ஒரு நாள் வீதம் எதிர்ப்பு வேலைநிறுத்தப் போராட்டம் நடத்தப்பட்டது.

பகத்சிங் தூக்குக்குப் பழிவாங்க தேசியப் புரட்சிகர இயக்கத்திற்குத் தொடர்பிபில்லாத பெயர் தெரியாத இளைஞர்கள் பிரிட்டிஷ் அதிகாரிகளையும் அப்ரூவர்களையும் 12 இடங்களில் சுட்டனர். 2வது லாகூர் வழக்கில் முக்கியமான சாட்சியாக மாறிய பனீந்திரா நாத்கோஷ் என்பவர் பீகாரின் பேட்டியாவில் கொல்லப்பட்டார். கராச்சி காங்கிரஸ் கூட்டத் தொடருக்கு காந்தி சென்றபோது லாகூருக்கும் கராச்சிக்குமிடையே ஒவ்வொரு பெரிய ரயில்வே நிலையத்திலும் கருப்புக் கொடிகளுடன் வாழ்த்து தெரிவித்தனர். இதற்கு முன் தேசப்பிதா என்று வாழ்த்திய அதே மக்கள் தான் இதையும் செய்தனர்.

எச்.எஸ்.ஆர்.ஏ. உருவாக்கம், பிறகு காங்கிரஸ் சோஷலிஸ்ட் கட்சி, அனைத்திந்திய விவசாய சங்கம், மாணவர் பெருமன்றம், முற்போக்கு எழுத்தாளர் சங்கம், இந்திய மக்கள் நாடக மன்றம், காங்கிரஸ் கட்சிக்குள் இடதுசாரிப் பிரிவின் தோற்றம்....இவையனைத்தும் குட்டி முதலாளித்துவ இளைஞர்கள் தீவிரமடைவது என்ற ஒரே இயக்கப் போக்கின் பல பகுதிகளே.. தேசியப் புரட்சியாளர்களைப் பொறுத்தவரையில் இந்த இயக்கப் போக்கை மிகச்சிறந்த முறையில் அடையாளப்படுத்தியவரும், குறிக்கோள்ககளைத் தெளிவாக இணைத்தவரும் பகத்சிங்தான். மேலும்இந்தஇயக்கப்போக்கில்தான் அவர், இன்னமும் வெறும் தனிநபராக இருந்து விடாமல் ஒரு தனிச்சிறப்பு வாய்ந்தவராக உருவானார்.

பகத்சிங்கின் தனிச்சிறப்பு அர்ப்பணிப்பு மிக்க புரட்சி வாழ்க்கையின் உச்சம். இன்றைய இளைஞர்கள் அவரின் அடியொற்றி ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வுடன் சோஷலிச இலக்கை நோக்கிப் பயணிக்க உறுதி ஏற்க வேண்டியது காலத்தின் அவசியம்.

(பகத்சிங் நினைவு தினம் மார்ச் 23)

- **பெரணமல்லூர் சேகரன்**

# அகில இந்திய கோரிக்கை நாள்

## 27.02.2020

அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் தேசிய கவுன்சில் முடிவின்படி புதிய பென்சன் திட்டம் ரத்து, கான்ட்ராக்ட், அவுட்சோர்சிங் முறையில் பணிநியமனங்கள் செய்யாமல் முறையான ஊதிய விகிதத்தில் பணிநியமனம் செய்தல், விலைவாசி உயர்வை கட்டுப்படுத்தல் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி அகில இந்திய கோரிக்கை நாள் 27.2.2020 அன்று தமிழகம் முழுவதும் அனுசரிக்கப்பட்டது.

### திண்டுக்கல்

மாவட்டத்தில் 11 மையங்களில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வட்ட தலைவர் விஜயகுமார் தலைமையில் மாவட்ட இணைச்செயலாளர் சுகந்தி பிச்சை வேல் சிறப்புரையாற்றினார். வட்ட செயலாளர் ராஜாமணி நன்றி கூறினார். திண்டுக்கல்லில் வட்ட தலைவர் ஜார்ஜ் தலைமையில் மாவட்ட துணைத் தலைவர் ராஜமாணிக்கம் சிறப்புரை ஆற்றினார். செயலாளர் சேகர் நன்றி கூறினார். நிலக்கோட்டையில் வட்ட பொருளாளர் பால் குருநாதன் தலைமையில் மாவட்ட செயலாளர் முபாரக் அலி சிறப்புரை ஆற்றினார். வட்ட இணைச்செயலாளர் காமராஜ் நன்றி கூறினார். ஒட்டன்சத்திரத்தில் வட்ட தலைவர் பழனிச்சாமி தலைமையில் மாவட்ட தலைவர் விஜயகுமார் சிறப்புரை ஆற்றினார். வட்ட செயலாளர் மெய்யர் நன்றி கூறினார். பழனியில் வட்ட தலைவர் வேலுச்சாமி தலைமையில் மாநில துணைத் தலைவர் மங்களபாண்டியன், மாவட்ட பொருளாளர் ராஜேந்திரன் சிறப்புரை ஆற்றினார்கள். வட்ட பொருளாளர் நாகராஜ் நன்றி கூறினார். ஆத்தூரில் வட்ட செயலாளர் அருண்பிரசாத் தலைமையில் மாவட்ட இணைச் செயலாளர் மகுடபதி சிறப்புரை ஆற்றினார். வேடசந்தூரில் வட்ட தலைவர் விஜயராகவன் தலைமையில் மாவட்ட இணைச் செயலாளர் ஜெயபால் சிறப்புரை ஆற்றினார். குஜிலியம்பாறையில் வட்ட பொருளாளர் மகாலிங்கம், நத்தத்தில் வட்ட தலைவர் பச்சைமுத்து, சாணார்பட்டியில் வட்ட செயலாளர் மோகன், கொடைக்கானலில் சீனிவாசன் ஆகியோர் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

### திருவாரூர்

மாவட்டத் தலைவர் எம்.ராஜமாணிக்கம் தலைமையில் ஆட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மாவட்டச் செயலாளர் வெ.சோமசுந்தரம் விளக்கவுரையாற்றினார். மாநிலச் செயலாளர் உ.சண்முகம், வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் எஸ்.மகேஷ், புள்ளியியல் துறையின் வி.சிவக்குமார் ஆகியோர் வாழ்த்தி பேசினர். எஸ்.செங்குட்டுவன் நன்றி கூறினார். இதில் 13 பெண் ஊழியர்கள் உட்பட 75 பேர் பங்கேற்றனர்.

### கிருஷ்ணகிரி

மாவட்டத்தில் கிருஷ்ணகிரி, ஓசூர், தேன்கனிக்கோட்டை, சூளகிரி ஆகிய நான்கு வட்டக் கிளைகளில் மதிய உணவு இடைவேளை ஆர்ப்பாட்டமாக நடைபெற்றது.

இதில் மாவட்ட நிர்வாகிகள் பி.சந்திரன், ஆர்.நடராஜன், வி.தேவராஜ், ஆர்.எம்.மஞ்சுளா, சி.கல்யாணசுந்தரம், கே.ஜெகதாம்பிகா ஆகியோரும், வட்டக் கிளை நிர்வாகிகள் என்.அன்பழகன், வி.சுகந்து பிரியன், சிவா, எம்.திம்மராஜ், கனகவல்லி, தினேஷ், ஏ.மணி, ஜி.வெங்கடேசன் மற்றும் முன்னணி தோழர்கள், துறைச் சங்க நிர்வாகிகள் 26 பெண்கள் உட்பட 136 ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

### நாகப்பட்டினம்

நாகப்பட்டினம் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க கட்டிடம் முன்பு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க நாகை மாவட்ட மையம் சார்பில் மாவட்டத் தலைவர் து.இளவரசன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்டச் செயலாளரும் அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளன தேசிய செயற்குழு உறுப்பினருமான அ.தி.அன்பழகன் விளக்கவுரை மாற்றினார்.

அனைத்து வட்ட மையங்கள் சார்பில் நாகை வட்டச் செயலாளர் எம்.தமிழ்வாணன், மாவட்ட நிர்வாகிகள் சார்பில் மாவட்ட துணைத் தலைவர்

சி.வாசுகி, தொழிற்சங்கங்கள் சார்பில் போக்குவரத்து தொழிளாளர் சங்க மண்டலச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜேந்திரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். முன்னாள் தேசிய செயற்குழு உறுப்பினரும், நாகை தொழிற்சங்க கூட்டமைப்பு தலைவர் சு.சிவகுமார் நிறைவுரையாற்றினார். இதில் ஐம்பதுக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். மாவட்டப் பொருளாளர் ப.அந்துவன் சேரல் நன்றி கூறினார்.

## கரூர்

மாவட்டத்தில் 8 இடங்களில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. கரூர், ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மண்மங்கலம் வட்டக்கிளைத் தலைவர் சுரேஷ்குமார் தலைமையேற்றார். மாவட்டத் தலைவர் மு.சுப்பிரமணியன் சிறப்புரையாற்றினார். வட்டச்செயலாளர் வ.கோபி நன்றி கூறினார்.

க.பரமத்தி ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் வட்டக்கிளைச் செயலாளர் இளங்கோ தலைமை தாங்கினார். மாவட்டத் தலைவர் மு.சுப்பிரமணியன் சிறப்புரையாற்றினார். வட்டப் பொருளாளர் சிவகாமி நன்றியுரையாற்றினார்.

தாந்தோணி, ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் சங்க மாவட்டத் தலைவர் மனோகரன் தலைமை தாங்கினார். மாவட்டச் செயலாளர் கெ.சக்திவேல் சிறப்புரையாற்றினார். நிர்மல் நன்றி கூறினார்.

மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் வட்டத் தலைவர் அறிவழகன் தலைமை தாங்கினார். மாவட்ட இணைச் செயலாளர் எல்.பாலசுப்பிரமணி சிறப்புரையாற்றினார்.

கரூர் தாலுக்காஅலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மாவட்டத் துணைத் தலைவர் எம்.எஸ்.அன்பழகன் தலைமை தாங்கினார். கரூர்-2 வட்டக்கிளைத் தலைவர் கோ.இலட்சுமணன் வரவேற்றார். மாவட்டச் செயலாளர் கெ.சக்திவேல் சிறப்புரையாற்றினார். கரூர்-2 வட்டச் செயலாளர் என்.செல்வன் நன்றியுரையாற்றினார்.

கிருஷ்ணராயபுரம் வேளாண்மைத்துறை அலுவலகம் மற்றும் அரசு பொது மருத்துவமனை முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு ரஞ்சித் தலைமை தாங்கினார். மாவட்ட இணைச் செயலாளர் மு.செல்வராணி சிறப்புரையாற்றினார்.

கடலூர், வட்டாட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு வட்டத் தலைவர் சீரங்கன் தலைமை தாங்கினார். வட்டச் செயலாளர் பிரேம்குமார் சிறப்புரையாற்றினார். மேற்கண்ட ஆர்ப்பாட்டங்களில் மாவட்டம் முழுவதும் பெண்கள் உட்பட நூற்றுக்கணக்கானோர் பங்கேற்றனர்.

## தருமபுரி

மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு மாவட்டத் தலைவர் எம்.சுருளிநாதன் தலைமை வகித்தார். மாவட்டச் செயலாளர் ஏ.சேகர், பொருளாளர் கே.புகழேந்தி, மகளிர் துணைக்குழு மாவட்ட அமைப்பாளர் பி.எஸ்.இளவேனில், ஊரக வளர்ச்சித் துறை அலுவலர் சங்க மாவட்ட தலைவர் ருத்ரையன், மாநில செயற்குழு உறுப்பினர் என்.ராமஜெயம், சத்துணவு ஊழியர் சங்க மாவட்ட தலைவர் சி.எம்.நெடுஞ்செழியன், மாவட்ட செயவாளர் சி.காவேரி, நில அளவைத்துறை ஒன்றிப்பின் மாநில துணை தலைவர் அண்ணாகுபேரன், பொது நூலகத் துறை அலுவலர் சங்க மாவட்ட செயலாளர் பிரபாகரன் ஆகியோர் கோரிக்கையை விளக்கி உரையாற்றினர்.

## வடசென்னை

குறளகம் வளாகத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்டத் தலைவர் சுந்தராம்பாள் தலைமையேற்றார். நாகலிங்கம் வாழ்த்தி பேசினார். மாவட்ட செயலாளர் நா.அந்தோணிசாமி விளக்கவுரை ஆற்றினார். குறளகம் பகுதிக் குழு செயலாளர் ஆ.கோபிநாதன் நன்றி கூறினார். இதில் 22 பெண்கள் உட்பட 60 பேர் பங்கேற்றனர்.

## தென்சென்னை

டிஎம்எஸ் வளாகத்தில் மாவட்ட தலைவர் சா.டானியல் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் நா.வினோத் குமார் கோரிக்கை விளக்கவுரையாற்றினார். மாநிலச் செயலாளர் இரா.ந.நம்பிராஜன் சிறப்புரையாற்றினார். பகுதிக்குழுத் தலைவர் மணிமாலா நன்றி கூறினார். பல்வேறு துறைகளைச் சார்ந்த 75க்கும் மேற்பட்ட ஊழியர்கள் பங்கேற்றனர். ❖

# மாவட்ட அளவிலான முன்னணி ஊழியர் கூட்ட நிகழ்வுகள்

## நீலகிரி

13.2.2020 அன்று முன்னணி ஊழியர்கள் கூட்டம் நடைபெற்றது. இதில் மாநிலத் தலைவர் மு.அன்பரசு, பொதுச் செயலாளர் அ.செல்வம், மாநில பொருளாளர் மு.பாஸ்கரன், மாநில செயலாளர் பரமேஸ்வரி ஆகியோர் சிறப்புரை யாற்றினார். 1050 உறுப்பினர் சந்தாவிற்கான தொகை, 100 நாட்குறிப்புக்கான தொகை மாநில மையத்திடம் வழங்கப்பட்டது. நிலுவை இல்லாத மாவட்டமாக நீலகிரி திகழ்கிறது என மாநிலப் பொருளாளர் மு.பாஸ்கரன் குறிப்பிட்டார்.

## மதுரை

15.2.2020 அன்று முன்னணி ஊழியர்கள் கூட்டம் நடைபெற்றது. இதில் மாநிலத் தலைவர் மு.அன்பரசு, பொதுச் செயலாளர் அ.செல்வம், மாநில பொருளாளர் மு.பாஸ்கரன், மாநில துணைத் தலைவர் மொ.ஞானத்தம்பி ஆகியோர் சிறப்புரையாற்றினார். 2000 உறுப்பினர் சந்தாவிற்கான தொகை, 100 நாட்குறிப்புக்கான தொகை மாநில மையத்திடம் வழங்கப்பட்டது. நிலுவை இல்லாத மாவட்டமாக மதுரை திகழ்கிறது என மாநிலப் பொருளாளர் மு.பாஸ்கரன் குறிப்பிட்டார்.

## திருவாரூர்

22.2.2020 அன்று திருவாரூர் மாவட்ட முன்னணி ஊழியர் கூட்டம் மாவட்டத் தலைவர் எம்.ராஜமாணிக்கம் தலைமையில் செல்வீஸ் ஓட்டலில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் வெ.சோமசுந்தரம் வரவேற்றார். மாநிலச் செயலாளர் உ.சண்முகம் துவக்கவுரையாற்றினார். தஞ்சாவூர் மாவட்டத் தலைவர் எஸ்.கோதண்டபாணி, முன்னாள் மாநிலச் செயலாளர் எம்.சௌந்தர்ராஜன் வாழ்த்துரை வழங்கினர். மாநிலத் தலைவர் மு.அன்பரசு சிறப்புரையாற்றினார். பொதுச் செயலாளர் அ.செல்வம் நிறைவுரையாற்றினார். கூட்டத்தில் 2000 உறுப்பினர் சந்தா மற்றும் 100 அரசு ஊழியர் பத்திரிகை சந்தா மற்றும் 100 நாட்குறிப்புக்கான தொகை மற்றும் நிலுவைத் தொகை ரூ.12,500 வழங்கப்பட்டது. நிலுவை இல்லாத மாவட்டமாக திருவாரூர் திகழ்கிறது என மாநிலப் பொருளாளர் மு.பாஸ்கரன் குறிப்பிட்டார். மாவட்ட துணைத் தலைவர் டி.எஸ்.சுபலெட்சுமி நன்றி கூறினார்.

## தஞ்சாவூர்

22.02.2020 அன்று தஞ்சை மாவட்டம் சார்பாக தஞ்சாவூர் பெசன்ட் அரங்கத்தில் மாவட்ட முன்னணி ஊழியர் கூட்டம் மாவட்டத் தலைவர் எஸ்.ரெங்கசாமி தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் ஏ.ரெங்கசாமி வரவேற்றார். நில அளவை ஒன்றிப்பின் செயலாளர் உ.சண்முகம் துவக்க உரையாற்றினார். அனைத்துத்துறை ஓய்வூதியர் சங்கத்தின் எஸ்.கோவிந்தராசு வாழ்த்துரை வழங்கினார். மாநிலப் பொருளாளர் மு.பாஸ்கர், பொதுச் செயலாளர் அ.செல்வம் ஆகியோர் சிறப்புரையாற்றினர். மாநில தலைவர் மு.அன்பரசு நிறைவுரையாற்றினார். கூட்டத்தில் 800 நாட்குறிப்பிற்கான தொகை மற்றும் 2200 உறுப்பினர் சந்தாவிற்கான தொகையை மாநில மையத்திடம் வழங்கப்பட்டது.

## புதுக்கோட்டை

23.2.2020 அன்று மாவட்ட முன்னணி ஊழியர் கூட்டம் மாவட்டத் தலைவர் எஸ்.ஜபருல்லா தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் ஆர்.ரெங்கசாமி வரவேற்றார். மாநில துணைத் தலைவர் ஆர்.மங்களபாண்டியன் துவக்கவுரையாற்றினார். தோழமை மற்றும் துறைவாரி சங்க முன்னணி ஊழியர்கள் பங்கேற்றனர். இதில் மாநிலத் தலைவர் மு.அன்பரசு, பொதுச் செயலாளர் அ.செல்வம், மாநில பொருளாளர் மு.பாஸ்கரன் ஆகியோர் சிறப்புரையாற்றினார். மாவட்ட பொருளாளர் ஆ.பழனிச்சாமி நன்றி கூறினார். இதில் 1150 உறுப்பினர் சந்தாவிற்கான தொகை, 100 நாட்குறிப்புக்கான தொகை மாநில மையத்திடம் வழங்கப்பட்டது. நிலுவை இல்லாத மாவட்டமாக புதுக்கோட்டை திகழ்கிறது என மாநிலப் பொருளாளர் மு.பாஸ்கரன் குறிப்பிட்டார்.

## பெரம்பலூர்

29.2.2020 அன்று முன்னணி ஊழியர்கள் கூட்டம் மாவட்ட தலைவர் இளங்கோவன் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் ப.குமரிஅனந்தன் வரவேற்றார். இதில் மாநிலத் தலைவர் மு.அன்பரசு, பொதுச் செயலாளர் அ.செல்வம், மாநில பொருளாளர் மு.பாஸ்கரன் ஆகியோர் பங்கேற்று சிறப்புரை யாற்றினார். கூட்டத்தில் 2019 ஆண்டுக்கான டைரி தொகை ரூ.4500, 2020ஆம் ஆண்டுக்கான 500 உறுப்பினர் சந்தாவிற்கான தொகை, 50 நாட்குறிப்புக்கான தொகை மாநில மையத்திடம் வழங்கப்பட்டது. நிறைவாக மாவட்ட பொருளாளர் ராஜராஜன் நன்றி கூறினார்.

## திண்டுக்கல்

04.03.2020 அன்று திண்டுக்கல் அரசு ஊழியர் சங்க கட்டடத்தில் முன்னணி ஊழியர்கள் கூட்டம் மாவட்டத் தலைவர் ஜெ.எஸ்.விஜயகுமார் தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் எஸ்.முபாரக் அலி வரவேற்றார். மாநிலச் செயலாளர் சி.ஆர்.ராஜ்குமார் துவக்கவுரையாற்றினார். இதில் மாநிலத் தலைவர் மு.அன்பரசு, பொதுச் செயலாளர் அ.செல்வம், மாநில பொருளாளர் மு.பாஸ்கரன் ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்றினார். தோழமை சங்க நிர்வாகிகள் வாழ்த்தி பேசினர். மாவட்ட பொருளாளர் கே.ராஜேந்திரன் நன்றி கூறினார்.

நிதி நிலுவையில்லா மாவட்டமாக திகழ்வதோடு 2020ஆம் ஆண்டுக்கான உறுப்பினர் சந்தா 2500க்கான தொகை மற்றும் 2020ஆண்டு பெற்ற 630 நாட்காட்டிக்கான தொகை வழங்கப்பட்டது.

❖

# விருதுநகர் மாவட்டப் பேரவை

16.2.2020 அன்று சிவகாசியில் திருத்தங்கல் ஐயப்பன் திருமண மஹாலில் மாவட்ட பேரவைக் கூட்டம் மாவட்ட அமைப்பு குழு உறுப்பினர் த.பால்முருகன் தலைமையில் நடைபெற்றது. ஜி.கோவிந்தன் அஞ்சலி தீர்மானம் வாசித்தார். வரவேற்புக் குழு தலைவர் கா.சிவபெருமான் வரவேற்றார். மாநிலத் தலைவர் மு.அன்பரசு துவக்கவுரையாற்றினார். மாவட்ட அமைப்பாளர் கா.கருப்பையா வேலை அறிக்கையினை சமர்ப்பித்தார். ஏ.ராமமூர்த்தி, எஸ்.ராமச்சந்திரன், ஜி.வெங்கடேசன், இரா.ஸ்ரீமுகுந்தன், பி.சங்கரநாராயணன் சி.முத்துவெள்ளைப்பன் ஆகியோர் தீர்மானங்களை முன்மொழிந்தனர்.

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்க மாநில பொருளாளர் வெ.சோமசுந்தரம், தமிழ்நாடு நீதித்துறை ஊழியர் சங்க மாநிலத் தலைவர் த.செந்தில்குமார், ஜேக்டோ-ஜியோ மாநில ஒருங்கிணைப்பாளர் கு.வெங்கடேசன், மாநிலத் தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்க மாநிலத் தலைவர் ப.சுந்தரம்மாள், தமிழ்நாடு அரசு கூட்டுறவுத்துறை ஊழியர் சங்க மாநிலத் தலைவர் எம்.சௌந்தர்ராஜன், தமிழ்நாடு வேளாண்மை அமைச்சுப்பணியாளர் சங்க மாநிலத் தலைவர் இரா.பன்னீர்செல்வம், தமிழ்நாடுமருத்துவத்துறை நிர்வாக ஊழியர் சங்க மாநில பொதுச் செயலாளர் இரா.ந.நம்பிராஜன், தமிழ்நாடு கிராம சுகாதார செவிலியர்கள் சங்க மாநிலத் தலைவர் சி.பரமேஸ்வரி, தமிழ்நாடு கருவூல கணக்குத்துறை அலுவலர் சங்க மாநில துணைத்தலைவர் ஜெ.மூர்த்தி, தமிழ்நாடு வணிகவரி பணியாளர் சங்க மாநிலத் துணைத் தலைவர் தே.முருகன், தமிழ்நாடு சமூக நலத்துறை பணியாளர் சங்க மாநில செயலாளர் இரா.ரெங்கசாமி, தமிழ்நாடு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை அலுவலர் சங்க தலைமை நிலையச் செயலாளர் தெ.வாசுகி, தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை சாலைப் பணியாளர் சங்க மாநில பொதுச் செயலாளர் ஆ.அம்சராஜ், தமிழ்நாடு அரசு அனைத்து துறை ஓய்வூதியர் சங்க மாவட்ட செயலாளர் எஸ்.இராமசுப்புராஜ் ஆகியோர் வாழ்த்தி பேசினர். பொதுச் செயலாளர் ஆ.செல்வம் நிறைவுரையாற்றினார். எஸ்.மணிமாலாபாண்டியன் நன்றி கூறினார்.


மாவட்டத் தலைவராக த.பால்முருகன், மாவட்ட துணைத் தலைவர்களாக இரா.ஸ்ரீமுகுந்தன், பி.தமிழ்செல்வி, எம்.சௌந்தரபாண்டியன், பா.மாரிமுத்து, மாவட்ட செயலாளராக கா.கருப்பையா, மாவட்ட இணைச் செயலாளர்களாக ஜி.வெங்கடேஷன், ஜி.கோவிந்தன்- நெடுஞ்சாலைத்துறை, பா.முருகன், எம்.மணிசேகரன், மாவட்ட பொருளாளராக சி.முத்து வெள்ளையப்பன் ஆகியோர் புதிய நிர்வாகிகளாக தேர்வு செய்யப்பட்டனர். ❖

# எளியோருக்கு எட்டாத கல்வி

கடந்த ஐம்பது ஆண்டுகளில், பள்ளிக்கு செல்லுதல் என்பது குறிப்பிடத்தக்க அளவு முன்னேறியிருக்கிறது என்பதில் சந்தேகம் இல்லை. பள்ளிகள் இல்லாத கிராமம் என்பது இல்லை ஆனால், இதனால் மட்டும் அனைவருக்கும் ஆரம்ப கல்வி என்ற குறிக்கோளை நாம் அடைந்து விட்டோம் என்று அர்த்தமாகாது. அனைவருக்கும் ஆரம்பக் கல்வி என்ற குறைந்தபட்ச குறிக்கோளைக்கூட எட்டும் நிலையை நாம் இன்றும் அடையவில்லை. பள்ளிக் கல்வியின் மையப்பிரச்சனை பள்ளியில் இருந்து குழந்தைகள் நின்று விடுதலும் குழந்தைகளின் ஆற்றலை வளர்ப்பதில் உள்ள குறைபாடுகளுமே ஆகும்.

இந்தியாவில் கல்வி பற்றி எந்த விவாதம் நடந்தாலும், முதல் சில வருடங்களிலேயே அதிக அளவிலான குழந்தைகள் பள்ளியை விட்டு நின்று விடும் போக்கு எனும் கவலை அளிக்கும் அம்சத்தை எதிர்கொண்டே ஆக வேண்டும். குழந்தைகளைத் தக்க வைக்க இயலாத பிரச்சனை, அனைவருக்கும் கல்வி கொடுப்பதற்கு ஒரு பெரும் தடைக்கல்லாய் இருக்கிறது. ஆரம்பப் பள்ளிகளில் பதிவு செய்து கொண்ட அனைத்து குழந்தைகளும், எட்டு வருட ஆரம்பக் கல்வியை (நமது அரசியல் அமைப்பை உருவாக்கிய வர்களின் விருப்பப்படி) முடித்தார்கள் என்றால் நடுநிலைப்பள்ளிகளில் அவர்களுக்கு இடம் கொடுப்பதில் இன்று பல கடுமையான சிக்கல் இருக்கும். நடுநிலைப் பள்ளிகளுக்கும் உயர் நிலைப் பள்ளிக்கும் உள்ள விகிதாச்சாரம் ஓரளவு சரியாகவே இருக்கிறது. இதன் பொருள் என்ன வென்றால், எட்டு வகுப்புவரை எப்படி யாவது படித்து வரும் குழந்தைகள், தொடர்ந்து படிப்ப தற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன. பெரும் பாலான குழந்தைகள் ஆரம்ப வகுப்புகளிலேயே பள்ளியை விட்டு நின்று விடுகின்றன.

இந்தியாவில் உள்ள 100 குழந்தைகளில் 50-60 குழந்தைகள் ஆரம்பப் பள்ளியில் சேருகிறார்கள். அவர்களில் 30-40 பேர்கள் சீக்கரமே பள்ளியை விட்டு நின்று விடுகிறார்கள். 20-25 குழந்தைகள் தான் நடுநிலைப்பள்ளியை எட்டுகிறார்கள். அவர்களில் 10-15 பேர்கள் பள்ளியை விட்டு நின்று விடுகிறார்கள். 5-10 குழந்தைகள்தான் உயர்நிலைப்பள்ளியை எட்டுகிறார்கள். அவர்களில் 4-6 பேர்கள் பள்ளியை விட்டு நின்று விடுகிறார்கள். 1-2 பேர்கள் மட்டுமே கடைசியாக கல்லூரியை அடைகிறார்கள்.



1ஆம் வகுப்பில் சேர்ந்த குழந்தைகளில் 44% 5ஆம் வகுப்பை அடைவதற்குள் பள்ளியை விட்டு நின்று விடுகிறார்கள். உண்மையில் பதிவு செய்தவர்களில் 63% 8 ஆம் வகுப்பை அடைவதே இல்லை. இந்த மாதிரி அதிகப்படியாகப் பள்ளியை விட்டு நின்று விடுவது கடந்த முப்பது ஆண்டுகளாய் மாறாமல் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. ஏனெனில் அவர்கள் பெற்றோர்கள் அவர்களை வேலைக்கு அனுப்புகிறார்கள்.

பெண் குழந்தைகளை (பெரும்பாலும் சம்பளம் இல்லாத வீட்டு வேலைகளில்) பணியில் ஈடுபடுத்துவது அதிகம் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. தமிழ்நாட்டு கிராமப்புறங்களில் செய்யப்பட்ட ஒரு ஆய்வின்படி ஆண் குழந்தைகளை விட இரு மடங்கு அதிகமாகப் பெண் குழந்தைகள் வேலை செய்கின்றனர்.

கல்வி முறை திருப்திகரமாக இல்லாத காரணத்தாலேயே (பொருளாதார தேவையினால் அல்ல) பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை பள்ளிக்கு பதில் வேலைக்கு அனுப்புகிறார்கள் என்பது பல ஆய்வுகள் மூலம் தெரியவருகிறது. பள்ளிப்படிப்பை முடித்தால், வேலை வாய்ப்புகள் அதிகரிக்கும் என்ற நம்பிக்கை மக்களிடமில்லை.

அரசு சொல்வதற்கு மாறாக, ஏழைக் குடும்பங்கள் ஆரம்ப வகுப்புகளிலிருந்தே குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்ப கூட செலவழிக்க வேண்டியுள்ளது. 14.4% கிராமப் புறத்துக் குழந்தைகளும், 49% நகர்புறத்துக் குழந்தைகளும் கல்வி கட்டணத்துடன் மற்ற

கட்டணங்களையும், கட்டணங்கள் அற்ற பிற செலவுகளையும் ஏற்க வேண்டியுள்ளது.

நிலைமை இப்படியிருக்கும் போது, 14 வயது வரைக்கும் இலவசக்கல்வி என்ற அரசியல் சாசன நெறி முறைக்கும் அர்த்தம் தான் என்ன? பள்ளியை விட்டு நிற்பதற்கு மற்ற காரணங்கள் கல்வியின் தரம், ஆசிரியர்களின் பணி நிலை, சம்பளமற்ற பள்ளிச் செலவுகளுக்கான மிகக் குறைந்த நிதி ஒதுக்கீடு, பள்ளிகளின் வசதிகளற்ற நிலை போன்றவைகளாகும். ஐந்தாம் அனைந்திந்திய கல்வி அறிக்கையின்படி:

• பாதி ஆரம்பப் பள்ளிகள்தான் ஒழுங்கான கட்டடங்களைக் கொண்டுள்ளன.

• 42% பள்ளிகளில் ஒரு பள்ளியறை மட்டும்தான் இருக்கிறது. பாதிக்குச் சற்று அதிகமான பள்ளிகளில்தான் உபயோகிக்கத்தக்க கரும் பலகையாவது உள்ளது. பாதிப் பள்ளிகளுக்கும் குறைவாகத்தான் குடிநீர் வசதி இருக்கிறது.

• கல்வியில் பாலினப் பாகுபாடு இருக்கிறது.

5 வருட கல்விப் படிப்பை முடித்தும் எழுதவோ, படிக்கவோ, சிறுகணக்குகளை போடவோ தெரியாத குழந்தைகளை பற்றி விளக்க ‘ஆற்றல் போதாமை’ என்ற பதம் பயன்படுத்தப்படுகிறது. 8 முதல் பத்து வருடப் பள்ளி படிப்பு குழந்தைகளுக்கு அடிப்படைத் திறமையையும், அறிவையும் வளர்க்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் அந்தக் குறைந்தபட்ச எதிர்பார்ப்பு கூட நிறைவேற்றப் படவில்லையானால், நோக்கமே அழிந்து விடுகிறது. பல பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளால் படிக்கமுடியவில்லை என்பதைக் கண்டு கொண்ட பின்னர்தான் பள்ளியில் இருந்து நிறுத்தி விடுகிறார்கள். சமூக அளவில் இந்தப் போக்கு சமூக ஏற்றத்தாழ்வுகளை நியாயப்படுத்துகிறது.

கல்வித்தரம் கொடுக்கப்பட்டுள்ள வசதிகளின் தரத்தை மட்டுமே பொறுத்தது அல்ல. அது பயன்படுத்தப்படும் கற்பிக்கும் முறையின் விளைவும் ஆகும். பாடத்திட்டமும், புத்தககங்களும் நகர, உயர் வர்க்க, உயர் சாதியினருக்கு ஏற்ற வண்ணம் தயாரிக்கப்படுகின்றன. இந்தக் கல்விமுறை கிராம ஏழைக் குழந்தைகளை முழுதும் நிராகரிக்கிறது. இந்த கல்வி அமைப்பில் தொடராத குழந்தைகள் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள் குடும்பத்தையும் ஏழை விவசாயிகள் குடும்பத்தையும் சார்ந்தவர்களாய் இருக்கிறார்கள்.

பெண் குழந்தைகளைப் பொறுத்தமட்டில் பள்ளியில் சேராததற்கும் சீக்கிரமே பள்ளியை விட்டு நின்று விடுவதற்கும் முக்கிய காரணம் சிறிய சகோதரர், சகோதரிகளைப் பராமரிக்க அவர்கள் பயன்படுத்தப்படுவதுதான். இதை அவசியம் குறிப்பிட வேண்டியது ஏனெனில், குழந்தைக் காப்பகங்கள் இந்தப் பிரச்சனையை சுலபமாகத் தீர்க்கலாம்.

வேறெந்த துறையைக் காட்டிலும் கல்வித் துறையில் தனியார் மயம் விரிந்து பரந்துள்ளது. ஆரம்பக்கல்வி முதல் உயர்நிலைக் கல்வி வரை தனியார் மயத்தின் தாக்கம். கல்வி கடைச்சரக்காக மாற்றப்பட்டு விட்டது. பணமிருந்தால் மட்டுமே படிக்க முடியும் என்ற நிலை. ஏழையின் குழந்தை என்ன மதிப்பெண் எடுத்தாலும் அது கணக்கிற்கு வராது. அதையும் தாண்டி நுழைவுத்தேர்வு அதில் நுழைய வேண்டுமானால் பல லட்சம் செலவழித்து பயிற்சி வகுப்புகளுக்கு செல்ல வேண்டும். இட ஒதுக்கீடு அங்கு செல்லாது. இடம் இருக்கும் ஆனால் அதில் இடம் பெற பணம் வேண்டும்.

புதிய கல்விக் கொள்கை அரசு பள்ளிகளுக்கு மூடுவிழா நடத்தும். பள்ளிகள் இணைக்கப்பட்டு விடும் மாணவர்கள் தொலை தூரங்களுக்கு துரத்தியடிக்கப்படுவார்கள். இதனால் இடைநிற்றல் அதிகமாகும். மீண்டும் ஒரு சமூகநீதிப் போராட்டம் இன்று அத்தியாவசியத் தேவையாக இருக்கிறது. போராட்டமே தீர்வைத் தரும் என்ற புரிதலோடு புறப்படுவோம். சமூக நீதி காப்போம்!

- **இரா.மங்களபாண்டியன்**

**பெண்களின் உரிமைகளுக்காக ஒரு விடியலை ஏற்படுத்தித் தந்த சர்வதேச மகளிர் தினத்தை நினைவு கூர்ந்து, நம்முடைய போராட்டங்களுக்கு உந்துசக்தியாக நின்ற மகளிர் அனைவருக்கும் வீர வணக்கம் செலுத்துவதோடு அவர்களின் போர்க்குணத்தை நமக்குள் வரித்துக் கொண்டு பெண்கள் உரிமைக்காக போராடும் மன உறுதியைப் பெற**

## 11.03.2020 அன்று மெழுகுவர்த்தி ஏந்தி அனைத்துலக மகளிர் உரிமைக்காக சபதம் ஏற்போம்!

# மார்ச் மாத வரலாற்று நினைவுகள்

## உலகம் முழுவதும் தொழிலாளர்களின் உணர்வுக்கு உந்துதலாக அமைந்த வரலாற்று நினைவுகள் - மார்ச் 28

*1871 - உலகின் முதல் பொதுவுடைமை அரசான பாரிஸ் கம்யூன் நிறுவப்பட்டது அமெரிக்க விடுதலைப் போர் உள்ளிட்டவற்றால் ஏற்பட்டிருந்த நிதி நெருக்கடி உள்ளிட்டவை மக்களைப் பெரும் இன்னலுக்கு ஆளாக்கியிருந்த நிலையில் ஏற்பட்டு முடியாட்சியை முடிவுக்குக் கொண்டுவந்த பிரெஞ்சுப் புரட்சி நிலப்பிரபுத்துவம் கிறித்தவ மதத்தலைமையின் அதிகாரம் முதலானவற்றை கட்டுப்படுத்தி மக்களுக்கான உரிமைகளை உருவாக்கியது. அதைத் தொடர்ந்து உருவான குடியரசை முடியாட்சிப் பேரசராகிய நெப்போலியன் அதன் பேரரசரானார். நெப்போலியனின் வீழ்ச்சிக்குப்பின்னும் தொடர்ந்த முடியாட்சி 1848இல் நடந்த பிப்ரவரி புரட்சியில் அகற்றப்பட்டு இரண்டாம் பிரெஞ்சுக்கு குடியரசு அமைக்கப்பட்டது. மூன்றாம் நெப்போலியன் என்று தன்னை அழைத்துக்கொண்ட லூயிநெப்போலியன் போனபர்ட் 1851இல் இதை மீண்டும் முடியரசாக அறிவித்துப் பேரரசரானார். ஜெர்மெனியை ஒருங்கிணைக்கும் முயற்சியில் பிஸ்மார்க் மேற்கொண்ட போர்களில் ஒன்றான பிரெஞ்சு - பிரஸ்யப் போரில் தோற்று இவர் சரணடைந்த நிலையில் பார்க் மக்கள் தொகையில் மிகப்பெரும்பான்மையாக இருந்த தொழிலாளர்கள் இதனை விரும்பவில்லை அரசின் நிதி நிலைகளால் ஊதியம் பாதிப்புக்குள்ளாவது தொடர்கதையாக இருந்த நிலையில் அரசின் நியாயமான முறையில் கையாளப்பட வேண்டும். பிரான்சின் பிற பகுதிகள் உள்ளூர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட குழுக்களால் நிர்வகிக்கப்படும் கம்யூன்களாக இருந்ததுபோல பாரீசும் இருக்க வேண்டும் போல கோரிக்கைகள் மறுக்கப்பட்டு வந்தன. அப்படியான நிலையில் தொழிலாளர்களே பாரீசைக் காத்து உருவாக்கிய இந்த கம்யூனை 72 நாட்களில் எதிரிகளான பிரான்சும் ப்ரஸ்யாவும் (ஜெர்மனி) கைகோத்து கொடூரமான முறையில் சுமார் 40 ஆயிரம் பேரைப் படுகொலை செய்து முடிவுக்குக் கொண்டு வந்தனர். இதற்குள்ளாகவே ஒரு தேர்தல் நடத்தி முறையான அரசு, சட்டங்கள் ஆகியவற்றை உருவாக்கி அனைவருக்கும் ஊதியம் உள்ளிட்ட ஏராளமான புரட்சிகர சீர்திருத்தங்களை மேற்கொண்ட இந்த அரசு, உலகம் முழுவதும் தொழிலாளர்களின் வர்க்க உணர்வுக்கு உந்துதலாக அமைந்தது. இதன் அடையாளங்கள்கூட முற்றிலுமாக அழிக்கப்பட்டு புரட்சியாளர்கள் கொல்லப்பட்ட இடத்தில் உள்ள மதில் சுவர் ஒன்று மட்டுமே நினைவுச் சின்னமாக உள்ளது.*



## அமெரிக்காவின் ஆணவம் வரலாற்று நினைவுகள் - மார்ச் 27

*1990 - கியூபா மக்களிடம் (ஃபிடல் காஸ்ட்ரோ தலைமையிலான கியூபா அரசுக்கு எதிரான கருத்துக்களைப் பரப்புவதற்கென்றே மார்ட்டி தொலைக்காட்சி என்பதை அமெரிக்கா தொடங்கியது. ஏற்கெனவே 1985இல் மார்ட்டி வானொலி என்பதை அமெரிக்கா நடத்தி வருகிறது. (கியூபா மக்களை ஏமாற்றுவதற்காக) கியூபா மக்களால் கொண்டாடப்படும் ஹோசே மார்ட் என்று பெயர் இவற்றுக்கு சூட்டப்பட்டது. இவையிரண்டும் அமெரிக்காவில் ஃப்ளோரிடாவிலிருந்து கியூப*

மக்களின் மொழியான ஸ்பானிய மொழி கியூப அரசுக்கு எதிரான கருத்துக்களைப் பரப்பி வருகின்றன. 2014ஆம் ஆண்டு நிலவரப்படி இவையிரண்டிற்காக மட்டும் ஆண்டுக்கு 2.7 கோடி டாலர்கள் (ரூ. 175 கோடி ) அமெரிக்க அரசு செலவிடுகிறது. இது மட்டுமின்றி சோவியத் அரசுக்கு எதிரான கருத்துக்களை அதன் மக்களிடம் பரப்புவதற்காக விடுதலை வானொலி அல்லது சுதந்திர ஐரோப்பிய வானொலி என்பதையும் தொடர்ந்து சோவியத்தின் வீழ்ச்சிக்குப் பின்னும் இன்றுவரை நடத்தி வருகிறது. சுதந்திரமான ஒன்று என்ற தொலைக்காட்சியையும் சவா வானொலி என்பதையும் அதே மொழியில் மத்தியக்கிழக்கு நாடுகள் வட ஆப்ரிக்கப் பகுதி மக்களிடம் நாளைய வானொலி என்பதை பாரசீக மொழியில் இரானிலும் ஆசிய சுதந்திர வானொலி என்ற பெயரில் ஒன்பது ஆசிய மொழிகளில் கிழக்காசிய நாடுகளிலும் அமெரிக்காவின் குரல் என்ற பெயரில் ஒர் அனைத்துலக வானொலியையும் அமெரிக்கா நடத்தி வருகிறது. இவையனைத்தும் அமெரிக்கா ஆதரவு நிலைப்பாட்டை (தேவையான இடங்களில் அம்மக்களின் சொந்த நாட்டு அரசுக்கு எதிரான நிலைப்பாட்டை) உருவாக்கும் பணியை செய்துவருகின்றன. இந்த ஒளி/ஒலிபரப்புக்களை அமெரிக்காவிலிருக்கும் மக்களிடம் செய்யக்கூடாது என்று தடைச் சட்டங்களையும் அமெரிக்கா இயற்றியிருக்கிறது என்பதிலிருந்து இவை எத்தகைய பொய்ப் பிரச்சாரங்களையும் மேற்கொள்கின்றன என்பதைப் புரிந்து கொள்ளலாம். பிற நாடுகளுக்குள் ஊடுருவிக் செய்யப்படும் இந்த வானொலி தொலைக்காட்சி ஒளி/ஒலிபரப்புக்களை சட்டவிரோதம் என்றும் ஏற்கத் தக்கதல்ல என்றும் ஐநாவின் அமைப்பான அனைத்துலகத் தொலைத்தொடர்பு சங்கம் உள்ளிட்ட அமைப்புகள் கண்டனம் தெரிவித்தாலும் எதையும் பொருட்படுத்தாமல் இவற்றை அமெரிக்கா தொடர்ந்து மேற்கொண்டுவருகிறது.

## நயாகரா அருவி நின்று போன அதிசயம் - மார்ச் 29

1848 - 12 ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாகக்கொட்டிக்கொண்டிருக்கும் நயாகரா அருவி நின்று போனது ஆம்! நோடிக்கு 2,25,000 கன அடிவரை நீரைக் கொட்டும் நயாகரா அருவி முழுவதுமாகப் பனியாக உறைந்துபோய். 30 மணி நேரத்துக்கு நின்று போனது முதலும், கடைசியுமாக அப்போதுதான்! நயாகரா பலமுறை பணி உறைந்திருந்தாலும் முழுவதுமாக உறைந்து, நீரோட்டம் மொத்தமாக நின்றது அப்போது மட்டும்தான். வட அமெரிக்காவிலுள்ள ஐம்பெரும் ஏரிகளில் இயரி ஏரியிலிருக்கும் நீர் வழிந்தோடி அதைவிடத் தாழ்வாக உள்ள ஒண்ட்டாரியே ஏரியில் கலப்பதுதான் நயாகரா ஆறு. வெறும் 58 கி.மீ நீளமுள்ள இந்த ஆற்றில்தான் நயாகரா அருவி உள்ளது. இது குதிரை லாட அருவி அமெரிக்கா அருவி மணப்பெண்ணின் முகத்திரை அருவி என்ற மூன்று அருவிகள் உள்ளடக்கியது. 90 சதவீத நீர் பாயும் குதிரை லாட அருவி அமெரிக்க எல்லையிலும் மற்ற இரண்டும் அமெரிக்காவிலும் உள்ளன. கனடா, அமெரிக்கா இரு நாடுகளும் சேர்த்து நயாகரா அருவியில் 4.4 கிகாவாட் (44 லட்சம் மெகாவாட்) நீர் மின்சாரத்தை உற்பத்தி செய்கின்றன. பகல் இரவு இரண்டிலும் நயாகராவைப் பார்க்க சுற்றுலாப் பயணிகள் குவிகின்றனர். 2008 நிலவரப்படி ஆண்டுக்கு 2.8 கோடிப் பேர் இந்த அருவியைப் பார்க்க வருகின்றனர். இவ்வளவு பிரம்மாண்டமான அருவி. இயற்கையாக நின்றது 30 மணி நேரம்தான் என்றாலும் அமெரிக்க அருவி மட்டும் செயற்கையாக 6 மாதங்களுக்கு நிறுத்தி வைக்கப்பட்டது, நம் பராமரிப்புக்காக 27,800 டன் கற்களை கொண்டு உருவாக்கப்பட்ட தற்காலிக அணை மூலம் நீரைக் கனடா பகுதிக்கு திருப்பிவிட்டு நிறுத்தப்பட்டது. நீரோட்டத்தால் அரிக்கப்பட்டு கொட்டி கிடக்கும் சிறு பாறைகளை அகற்ற திட்டமிட்டு செலவு காரணமாக அப்பணி கைவிடப்பட்டது. வேறுசில பாதுகாப்புப் பணிகள் முடிக்கப்பட்ட பின் 1969 நவம்பரில் தற்காலிக அணை தகர்க்கப்பட்டு மீண்டும் ஏரியில் தண்ணீர் விடப்பட்டது.



தொகுப்பு : **மு.பாஸ்கரன்**

# குடிநீர் தனியார்மயம் உணர்த்தும் பாடங்கள்

**த**ண்ணீர் பற்றாக்குறை உட்பட சமூகப் பிரச்சனைகளுக்கு தீர்வு காண விஞ்ஞானிகள் மாநாட்டில் பிரதமர் வேண்டுகோள் (15.2.2020) விடுத்தார். தண்ணீர் பற்றாக்குறைக்கு இயற்கை மட்டுமா காரணம், ஆட்சியாளர்களின் கொள்கைகளே பிரதான காரணமாக உள்ளது.

இந்திய அரசின் சமீபத்திய அறிக்கையின்படி இந்தியாவில் 21 நகரங்களில் குடிநீருக்காக உபயோகிக்கப்படும் நிலத்தடி நீர் 2020இல் முற்றிலும் குறைந்து பெரும் நெருக்கடி ஏற்படும் அபாயம் உள்ளது.

சென்னை மட்டுமல்லாமல் தமிழகம் எங்கும் ஏற்பட்டுள்ள கடும் வறட்சி மற்றும் குடிநீர்ப் பிரச்சனை ஏதோ மழைப்பொழிவு குறைவு, அதனால் தண்ணீர் அளவு குறைவு, எனவே தேவையை பூர்த்தி செய்ய முடியவில்லை என்ற அடிப்படையில் மட்டும் பார்க்க முடியாது. மாறாக, அரசு கடைபிடிக்கும் உலகமய, தாராளமய, தனியார்மய கொள்கைகளின் அடிப்படையில் ஆராய்வது அவசியம்.

## அரசின் தனியார்மயக் கொள்கை

உலக அளவில் 1990களிலிருந்து தாராளமய, தனியார்மய பொருளாதாரக் கொள்கைகள் பின்பற்றப்பட்டு வருகிறது. இதனால் நீர்மேலாண்மையில் அரசுத் துறையின் பங்கு வெகுவாக குறைக்கப்பட்டு வருகிறது. தனியார் பங்கீடு அதிகமாக்கப்பட்டுள்ளது.

## கைவிடப்பட்ட மக்கள் நல அரசு கொள்கைகள்

முன்பிருந்த கினிஷியன் பொருளாதார அடிப்படையில் மக்கள் நல அரசு என்ற கோட்பாடு கைவிடப்பட்டு எல்லாத் துறை களிலும் சந்தைப் பொருளாதாரம் புகுத்தப் பட்டது. எனவே, குடிநீர் தனியார்மயமாக்கலை உலகப் பொருளாதார மாற்றத்தின் ஒரு பகுதியாகவே பார்க்க வேண்டும். முக்கியமாக தண்ணீர் ஒரு சந்தைப் பொருளாகவே மாறியுள்ளது எனலாம்.

## உலக அனுபவங்கள்

குடிநீர் பொதுவாக தனியார்மயமாக்கப்படும் போது குடிநீர் வரி பல மடங்கு உயர்த்தப்படுவது பல நாடுகளின் அனுபவம். சூயஸ் மற்றும் வெலோசியா போன்ற தனியார் நிறுவனங்கள் நிர்வாக ஒப்பந்தம் மேற்கொண்ட பல நாடுகளில் குடிநீர் வரி பல மடங்கு அதிகரித்துள்ளன. இதனால் முக்கியமாக தென்ஆப்பிரிக்கா, தென்அமெரிக்கா மற்றும் கரீபிய நாடுகளில் குடிநீர் தனியார்மயத்திற்கு எதிராக போராட்டங்கள் நடைபெற்றுள்ளன. குடிநீர் தனியார் மயத்திற்கு எதிராக பொலிவியா நாட்டில் மக்கள் போராட்டங்கள் மூலம் முறியடிக்கப்பட்டுள்ளது. உலக அளவில் கடந்த 15 ஆண்டுகளில் 35 நாடுகளில் உள்ள 180 நகரங்களில் தனியார் துறை நிர்வாகத்திற்கு எதிராக போராட்டங்கள் நடைபெற்று குடிநீர் சேவை பொதுத்துறைக்கு மாற்றப்பட்டுள்ளது.

தனியார் கம்பெனிகள் உலகில் எங்கு லாபம் அதிகம் கிடைக்கும் என்பதை ஆராய்ந்து அப்படிப்பட்ட இடங்களான நடுத்தர வளர்ச்சி நாடுகளிலேயே அதிகம் முதலீடு செய்துள்ளன. ஏழைகள் வாழும் பகுதிகளில் லாபம் கிடைக்காது என்பதால் தனியார் கம்பெனிகள் முதலீடுகள் மேற்கொள்ளப்படுவதில்லை.

அமெரிக்காவில் மேற்கொண்ட ஓர் ஆய்வின்படி பொது நிறுவனங்கள் வழங்கும் குடிநீரின் செலவு தனியார் நிறுவனங்களைவிட சராசரியாக 20 சதவீதம் குறைவு என கணக்கிடப்பட்டுள்ளது. எனவே, தனியார்மயம் என்பது நிர்வாகத் திறமையை அதிகரித்து குடிநீர் திட்டங்களின் பலனை அதிகரிக்கும் என்பது ஒரு மாயையே.

## இந்தியாவில் தண்ணீர் மய அனுபவங்கள்

தண்ணீர் தனியார் மயம் இந்தியாவில் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. கிட்டத்தட்ட 17 ஆண்டுகளுக்கு முன்பே தற்போதைய சத்தீஸ்கர் மாநிலத்தில் 23.5 கி.மீ. நீளம் உள்ள சிவராத் என்ற ஆற்றையே ரேடியஸ் வாட்டர் லிமிடெட் என்ற தனியார் நிறுவனத்திற்கு தொழில்துறை வளர்ச்சிக்காக விற்றுவிட்டது மாநில அரசு. இதைத்தவிர வெலோவியா, ஜீஸ்கோ ஆரஞ்சு பாட்டில் வாட்டர் போன்ற தனியார் நிறுவனங்கள் பல ஆண்டுகளாக இந்தியாவில் செயல்பட்டு வருகின்றன. இதனால் குடிநீர் வரி உயர்வு, அரசு

சேவை குறைவு ஆகியவற்றால் மக்களின் வாழ்நிலை பாதிக்கப்பட்டுள்ளது. சிவராத் ஆறு விற்பனை மூலம் அரசுக்கு பெரிய அளவில் நிதி இழப்பு ஏற்பட்டது என அறியப்பட்டுள்ளது. மேலும் இந்த ஆற்றை நம்பி இருந்த பொதுமக்களின் வாழ்நிலை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

பொதுவாக இந்தியாவில் தண்ணீர் தனியார் மயம் 2000க்கு பிறகு அதிகரித்துள்ளது. இதற்கு அடிப்படை உலக வங்கி மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கிகளே ஆகும். மேலும் 2012ஆம் ஆண்டில் வகுக்கப்பட்ட மத்திய அரசின் நீர் கொள்கையும் தனியார்மயத்தை ஊக்குவித்து, தனியார்மய குடிநீர் திட்டங்கள் மிக அதிகமாக மகாராஷ்டிராவிலும், கர்நாடகத்திலும் அதிகரித்துள்ளது. தமிழ்நாட்டில் 25 திட்டங்களில் தனியார் முதலீடுகள் உள்ளது.

நாக்பூர் நகராட்சி அமைப்பு 2007ல் குடிநீர் விநியோகத்தை வெலோவியா என்ற நிறுவனத்திற்கு வழங்கியது. முதலில் குறைந்த அளவில் சில வார்டுகளில் ஆரம்பிக்கப்பட்ட தனியார்மயத் திட்டம் 2011ல் நகரம் முழுவதும் விரிவாக்கப்பட்டது. குடிநீர் வரி நான்கு மடங்கு அதிகரிக்கப்பட்டு மக்களுக்கு வரிச்சுமையை ஏற்றின தனியார் நிறுவனங்கள். இதற்கு எதிராக நாக்பூர் மக்கள் மற்றும் நகராட்சி ஊழியர்கள் சங்கம் 2016ல் மிகப்பெரிய போராட்டங்கள் நடத்தின. நாக்பூர் மட்டுமல்லாது கொல்கத்தா, மைசூர் மற்றும் இதர நகரங்களிலும் தனியார் நிறுவனங்கள் மக்கள் சேவையில் தோல்வி கண்டுள்ளன.

அரசு தனியார் கூட்டு Public Private Partnership (PPP) என்ற போர்வையில் பல நீர்வளத் திட்டங்கள் தனியார் நிறுவனங்களின் இலாப வேட்டைக்கு இரையாகியுள்ளன என்றால் மிகையாகாது.

## தமிழகம்

திருப்பூரில் 1995ல் புதுத்திருப்பூர் வளர்ச்சித் திட்டம் என்ற பெயரில் துவங்கப்பட்ட குடிநீர் திட்டம் 1023 கோடி ரூபாய் செலவில் மிகுந்த விளம்பரத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. 1995ல் ஆரம்பிக்கப்பட்ட திட்டப் பணிகள் 2005ல்தான் முடிவடைந்தது. ஆனால் தனியார் கம்பெனிகள் ஒப்பந்தப்படி முதலீடு செய்யாத நிலையில் இந்தத் திட்டம் சரிவர செயல்படவில்லை.

கோவை நகர குடிநீர் விநியோகம் மற்றும் மராமத்து பணிகள் சூயஸ் எனும் பிரெஞ்சு கம்பெனிக்கு தாரைவார்க்கப்பட்டுள்ளது. 25 ஆண்டுகளுக்கு இந்நிறுவனம் கோவை மாநகரில் குடிநீர் நிர்வாகத்தை கவனிக்கும். முதல் 5 ஆண்டுகள் குடிநீர் விநியோக கட்டமைப்பை சீர் செய்ய வேண்டும். அதன்பிறகு 20 ஆண்டுகள் குடிநீர் விநியோகத்தை நிர்வாகம் செய்வது இதனுடைய பணியாகும். இதற்காக ரூ.2300 கோடி இந்த நிறுவனத்திற்கு கொடுக்கப்படும். குடிநீர் வரி உயர்த்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. சூயஸ் கம்பெனி செம்பரம்பாக்கம் ஏரியை சரிவர பராமரிப்பு செய்யாமல் இருந்ததால் சென்னையில் ஏற்பட்ட வெள்ளத்திற்கு சூயஸ் நிறுவனம் காரணம் என மத்திய தணிக்கையாளர் அறிக்கை (CAG) தெரிவித்துள்ளது. இப்படியிருக்க இந்த கம்பெனிக்கு தற்போது எவ்வாறு ஒப்பந்தம் கொடுக்கப்பட்டது.

சென்னை போன்ற நகரங்களில் குடிநீருக்கு மக்கள் தங்கள் வருமானத்தில் 10 முதல் 20 சதவீதம் செலவிடுகிறார்கள் என கணக்கிடப்பட்டுள்ளது. இது பெருமளவு நடுத்தர மற்றும் உயர்தர மக்களுக்கு மட்டுமே உதவும். ஏழைகள் பெருமளவில் விநியோகத்திலிருந்து விடுபட்டுள்ளனர்.

பிரச்சனையின் தன்மையறிந்து நீண்டகால நோக்கோடு அரசு செயல்படவில்லை என சென்னை உயர்நீதிமன்றம் கடிந்துள்ளது. குடிநீர் பிரச்சனைகளுக்கு அடிப்படை காரணம் அரசின் பொருளாதார கொள்கைகளே.

அரசு பட்ஜெட்டில் நீர்வளம் போன்ற திட்டங்களுக்கு ஒதுக்கீடு குறைக்கப்பட்டுள்ளது. மேலும் வறட்சி மற்றும் குடிநீர் பிரச்சனைகளுக்கு நிரந்தர தீர்வுகாண தொலைநோக்கு திட்டங்கள் தீட்டப்படவில்லை.

குடிநீர் என்பது மற்ற விற்பனை பொருட்கள் போல் அல்ல. குடிநீர் மக்களின் வாழ்வுரிமை. இதை பூர்த்தி செய்வது மக்கள் நல அரசின் அடிப்படைக் கடமை. குடிநீர் நிர்வாகத்தில் பொதுமக்களின் குறிப்பாக ஏழைகளின் பங்கு உறுதி செய்யப்பட வேண்டும். மீண்டும் குடிநீர் நிர்வாகத்தை மாநகர அமைப்புகளுக்கு திருப்பித்தர வேண்டும்.

- **கரூர் எம்.எஸ்.**

# பெண்களின் போராட்டம் என்றும் தோற்றதில்லை!

## மாதர்தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்திட சர்வதேச மகளிர் தினத்தில் சபதம் ஏற்போம்!

எந்த அரசாங்கமும் கண்டு கொள்ளாத நிலையில் புதுதில்லியில் உள்ள ஷாஹீன் பாக் பகுதியில் கடந்த 80 நாட்களாகவும், சென்னை வண்ணாரப்பேட்டை லாலாகுண்டா பகுதியில் பிப்ரவரி 14ஆம் தேதியிலிருந்தும் நாட்டின் இன்னும் பல பகுதிகளிலும் குடியுரிமை திருத்தச் சட்டம், தேசிய மக்கள்தொகை பதிவேடு, தேசிய குடியுரிமைப் பதிவேடு ஆகியவற்றுக்கு எதிராக பெண்கள் போராடி வருகிறார்கள். எவ்வளவு நாள் வேண்டுமானாலும் போராட்டம் நடத்திக் கொள்ளுங்கள் நாங்கள் ஒரு அடிகூட பின்வாங்க மாட்டோம் என்று பிரதமர் மோடி அறிவித்த பின்னரும் இந்தப் போராட்டங்கள் தொடர்ந்து துடிப்போடு நடந்து வருகின்றன. ஆண்களின் உடலுறுதியைவிட பலமான மனவுறுதி கொண்ட பெண்களின் போராட்டங்கள் என்றும் தோற்றதில்லை என்பது வரலாறு சொல்லும் சேதி. பெண்கள் தங்களின் உரிமைகளை போராடியே பெற்றுள்ளார்கள் என்பது உணர்த்தப்பட்டுள்ள நீதி.

பெண்களின் முதல் போராட்டம் என்பது 1789ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 14ஆம் தேதி பிரெஞ்சு புரட்சியின் போது பாரீஸில் நிகழ்ந்தது. ஆண்களுக்கு நிகராக பெண்கள் இந்தச் சமுதாயத்தில் உரிமைகள் பெற வேண்டும், ஆண்களை போலவே எட்டுமணி நேர வேலை, பெண்களுக்கு வாக்குரிமை, பெண்களை அடிமைகளாக நடத்தப்படுவதிலிருந்து விடுதலை போன்றவற்றிற்காக தங்கள் கைகளில் கிடைத்த ஆயுதங்களை எடுத்துக்கொண்டு பாரீஸ் நகரத் தெருக்களில் பெண்கள் அணி திரண்டனர். போராடும் பெண்களை என் அதிகாரத்தைக் கொண்டு அடக்குவேன், போராட்டத்தில் ஈடுபடுவோரை கைது செய்து சிறைக் கொட்டடிகளில் அடைப்பேன் என்று அந்நாட்டு அரசன் லூயிஸ் பிலிப் கொக்கரித்தான். அந்தக் கொக்கரிப்புக்கு பயப்படாமல் பெண்கள் தங்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர். ஆண்களும் அவர்களுக்கு ஆதரவாக அணிவகுத்தனர். கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது அரசு மாளிகை முன்பு ஆயுதங்களுடன் அணிதிரண்ட மகளிரைக் கண்டு அரசனின் மெய்க்காப்பாளர்கள் இருவர் போராட்டத்தில் ஈடுபடும் உங்கள் அனைவரையும் கைது செய்து சிறையிலடைக்க நேரிடும் என்று மிரட்ட அவர்கள் இருவரையும் கூட்டத்தினர் திடீரெனப் பாய்ந்து தாக்கிக் கொன்றனர். இதை எதிர்பாராத லூயிஸ் பிலிப் தன் உயிரைக் காத்துக்கொள்ள பெண்களின் கோரிக்கைகளை கண்டிப்பாக பரிசீலித்து சாதகமான முடிவெடுப்பதாக கூறினான். ஆனால் அவனால் பெண்களின் கோரிக்கையை நிறைவேற்ற முடியாமல் போனதால் முடி துறந்தான்.

பெண்களின் போராட்டம் ஒரு அரசனை முடி துறக்க வைத்த நிகழ்வு ஐரோப்பிய நாடுகளில் பரவ அங்கும் பெண்கள் தங்கள் உரிமைகளுக்காக போராட்டங்களில் இறங்கினர். இத்தாலியிலும் பெண்கள் இதுதான் சமயம் என்று வாக்குரிமை கேட்டு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். இப்படி எழுந்த பெண்களின் தொடர் போராட்டங்களின் காரணமாக பல நாடுகளில் ஆளும் வர்க்கங்கள் அதிர்ந்துபோயின. பிரான்சில், புருஸ்ஸியனில் இரண்டாவது குடியரசை நிறுவிய லூயிஸ் பிளாங்க் பெண்களை அரசவை ஆலோசனைக் குழுக்களில் இடம்பெறச் செய்யவும் பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கவும் 1848ஆம் ஆண்டு மார்ச் 8ஆம் தேதி ஒப்புதல் தந்தான். அந்தநாள்தான் அனைத்துலக பெண்கள் தினமாக மார்ச் 8ஆம் நாளைக் கொண்டாட வித்தாக அமைந்தது.

மகளிர் போராட்டம் சொல்லும் தத்துவம் ஒன்றுதான், போராடினால்தான் உரிமை கிடைக்கும். தொடர்ந்து போராடினால்தான் உண்மை ஜெயிக்கும் என்பதாகும். இந்த சிந்தனை ஆண் பெண் பாகுபாடின்றி தொழிலாளி வர்க்கத்திடமும், சமத்துவ எண்ணம் கொண்டோரிடமும், பொது உடைமைச் சிந்தனையாளர்களிடமும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. அதன் விளைவுதான் 1910ஆம் ஆண்டில் அனைத்துலகப் பெண்கள் மாநாடு நடத்த வழிகோலியது. கோபன் ஹேகனில் நடந்த இந்த மாநாட்டில் சர்வதேச மகளிர் அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது. இந்த அமைப்பின் சார்பில் 1911ஆம் ஆண்டு மார்ச்சு 19ஆம் தேதி ஜெர்மனி, ஆஸ்திரியா, சுவிட்சர்லாந்து, டென்மார்க் மற்றும் சில ஐரோப்பிய நாடுகளிலிருந்து வந்து கலந்து கொண்ட மகளிர் பிரதிநிதிகள் முதல் சர்வதேச மகளிர் தினத்தைக் கொண்டாடினர். இந்தக் கூட்டத்தில்தான் அரசன் லூயிஸ் பிளாங் பெண்களுக்கு வாக்குரிமை அளிக்க ஒப்புதல் அளித்த நாளான மார்ச் 8ஆம் தேதியை நினைவு கூறும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 8ஆம் தேதியை சர்வதேச மகளிர் தினமாக கொண்டாட முடிவு செய்து தீர்மானம் நிறைவேற்றினர்.

1913-1914 ஆண்டுகளில் முதல் உலகப் போரின்போது ரஷ்யப் பெண்கள் போருக்கு தங்கள் எதிர்ப்பினை வெளிப்படுத்தும் விதமாக மார்ச் 8ஆம் நாள் பெண்கள் நாள் பேரணிகளை நடத்தினார்கள். பின்வந்த நாட்களில் பெண்கள் போராட்டங்கள் ஐ.நா.சபையில் உலக மகளிர்

ஜனநாயக சம்மேளனத்தின் அதிகாரப்பூர்வ முயற்சிகள் ஆகியவற்றின் அடிப்படையில், ஐ.நா.பெண்கள் அமைப்பு சார்பில் அனைத்துலகப் பெண்கள் நாள் கடைபிடிப்பது என முடிவெடுக்கப்பட்டதன் அடிப்படையில் உலக மகளிர் தினத்தின் நிரந்தரமான தேதியாக மார்ச் 8 என்ற தேதியை பெண்கள் அகிலம் 1921ஆம் ஆண்டில் நிச்சயித்து முடிவு செய்ததன் அடிப்படையில் ஆண்டுதோறும் மார்ச் 8ஆம் நாள் சர்வதேச மகளிர் தினமாகக் கொண்டாடப்படுகிறது. அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனம் அதை நினைவிற்கொண்டும், இந்தியாவில் தற்போது பெண்களுக்கு எதிராக நிகழ்த்தப்படும் பாலியல் வன்முறைக்கு எதிரான தனது நிலைபாட்டை உணர்த்தும் வகையிலும். பெண்கள் மீதான வன்முறைக்கு எதிராக AISGEF அறைகூவல் விடுத்துள்ள இந்நிகழ்ச்சியில் உழைக்கும் மகளிரான நாம் அனைவரும் 11.03.2020 அன்று மெழுகுவர்த்தி ஏந்தி பாலியல் வன்முறைக்கு எதிரான நமது கருத்தினை பதிவு செய்ய நம்முடைய உரிமைகளுக்காக தொடர்ந்து போராட உறுதி ஏற்போம்.

**பெண்களின் உரிமைகளுக்காக ஒரு விடியலை ஏற்படுத்தித் தந்த சர்வதேச மகளிர் தினத்தை நினைவு கூர்ந்து, நம்முடைய போராட்டங்களுக்கு உந்துசக்தியாக நின்ற மகளிர் அனைவருக்கும் வீர வணக்கம் செலுத்துவதோடு அவர்களின் போர்க்குணத்தை நமக்குள் வரித்துக் கொண்டு பெண்கள் உரிமைக்காக போராடும் மன உறுதியைப் பெற**

**11.03.2020 அன்று மெழுகுவர்த்தி ஏந்தி அனைத்துலக மகளிர் உரிமைக்காக சபதம் ஏற்போம்!**





# புதிய மாவட்டக் குழு உதயம்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் ராணிப்பேட்டை மாவட்ட புதிய அமைப்பு துவக்க விழா மற்றும் மாவட்ட பொதுக்குழு 08-02-2020 அன்று ஆற்காடு வட்டார வளர்ச்சி அலுவலக வளாகத்தில் மாவட்ட அமைப்பாளர் கோ.மோகனமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

புதிய மாவட்ட நிர்வாகிகளை அரசு ஊழியர் சங்க வேலூர் மாவட்டத் தலைவர் க.சரவணராஜ் அறிமுகம் செய்து உரையாற்றினார். அரசு ஊழியர் சங்க முன்னாள் மாவட்டத் தலைவர்கள் சுந்தரேசன், குப்பன், தினகரன், மு.சிலுப்பன், முன்னாள் மாவட்ட செயலாளர் மோ.ஜெயசீலன் ஆகியோர் உரையாற்றினர். அனைத்துத்துறை ஓய்வூதியர் சங்க மாநில பொதுச் செயலாளர் பி.கிருஷ்ணமூர்த்தி, அரசு ஊழியர் சங்க மாநில துணைத்தலைவர் மொ.ஞானத்தம்பி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

மாவட்டத் தலைவராக எஸ்.ஜோசப் கென்னடி, மாவட்டச் செயலாளராக கோ.மோகனமூர்த்தி, மாவட்ட பொருளாளராக பி.செல்வகுமார், மாவட்ட துணைத்தலைவர்களாக ஆர்.பாபு, வி.என்.பார்த்திபன், பொன்.வேதமுத்து, வி.செல்வம், மாவட்ட இணைச் செயலாளர்களாக எச்.சரவணன், ஏ.ஆறுமுகம், சி.கார்த்தீபன், பி.தினேஷ்குமார், மாவட்ட தணிக்கையாளர்களாக வி.ஜெயஅரவிந்தன், ஏ.கங்காதரன் ஆகியோர் புதிய மாவட்ட நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர். இந்நிகழ்வில் 90 பெண் ஊழியர்கள் உட்பட 170 பேர் பங்கேற்றனர். ❖

# நிறைவேறி வருவது காந்தியின் பெயரில் கோட்சேவின் கனவு

**2020** புத்தாண்டின் நாடாளுமன்ற கூட்டத் தொடரின் துவக்க உரையாக அமைந்த குடியரசுத் தலைவர் உரை மிகுந்த ஏமாற்றமளிப்பதாகவும் உண்மைக்குப் புறம்பானதாகவும் அமைந் திருந்தது. மத்திய பா.ஜ.க. அரசின் உரையை வாசிப்பவர்தானே குடியரசுத் தலைவர் என்னும் போது அம்பை நொந்து பயனில்லை; அம்பை ஏவியவர்களே குற்றவாளிகள் என்பதில் ஐயமில்லை.

மகாத்மா காந்தியின் கனவுகளை நிறைவேற்று வதற்காகத்தான் குடியுரிமைத் திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டிருப்பதாக குடியரசுத் தலைவர் உரையில் சொல்லப்பட்டிருக்கிறது. மகாத்மா காந்தியை இழிவுபடுத்துவதற்கும் அவர் கனவுகளையும் சிந்தனைகளையும் சிதைப்பதற் கும் ஓர் எல்லையுண்டு. கோட்சே காந்தியை அவருடைய மார்பைப் பார்த்துத்தான் சுட்டுக் கொன்றான். சுட்டுக் கொல்வதற்கு முன் காந்தி யின் முன்னால் வந்து, அவர் காலைத் தொட்டு வணங்கிவிட்டுத்தான், காந்தியைச் சுட்டுக் கொன்றான். இப்போது காந்தியின் கனவுகளை நிறைவேற்றுவதற்காகத்தான், குடியுரிமைத் திருத்தச் சட்டத்தை நிறைவேற்றியிருப்பதாகக் கூறுவதன் மூலம் காந்தியின் ஆன்மாவையும் கொன்றிருக்கிறார்கள். உண்மையில் ஆட்சி யாளர்கள் காந்தியின் கனவுகளை நிறைவேற்றிக் கொண்டிருக்கவில்லை. மாறாக, கோட்சே, சாவர்க்கர், கோல்வால்கர் மற்றும் எம்.எஸ்.மூஞ்சே ஆகியோரின் கனவுகளைத்தான் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

காந்தியின் கனவு 'இந்தியாவின் இதயம் இந்து-முஸ்லிம் ஒற்றுமை' என்பதுதான். அவர் ஆற்றிய பல உரைகளில் இந்தியா ராமருக்கும் ரஹீமுக்கும் பொதுவானது என்று பேசியிருக்கிறார். நாடு மதத்தின் பெயரால் துண்டாடப்படுவதை அவர் எதிர்த்தார். அவ்வாறு நடந்தபோது, 'என் இதயமும் இரண்டாகப் பிளந்துள்ளது' என்றார். ஆனால் இந்த அரசாங்கம், இந்தச் சட்டத் திருத்தத்தின் மூலம், அவர் கண்ட ஒற்றுமைக் கனவை நசுக்கியிருக்கிறது. இந்த வெட்ககரமான சட்டத்திற்கு காந்தியின் பெயரைப் பயன் படுத்துவது ஏற்புடையதல்ல.




குடியுரிமை திருத்தச் சட்டத்திற்கு ஆதரவு தெரிவித்த மத்திய ஆளுங்கட்சியின் நேசக் கட்சியினர் பலர் எதிராகத் திரும்பியிருப்பது கண்கூடு. மக்கள் குறிப்பாக இளைஞர்கள் வீதிகளில் அணிதிரண்டு பிளவுவாத அரசியலுக்கு எதிராகக் கிளர்ச்சிப் போராட்டங்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அனுராக்சிங் தாகூர் போன்ற மத்திய அமைச்சர்கள் மற்றும் பா.ஜ.க.வினர் வெறுப்பு அரசியலைப் பரப்பிக் கொண்டிருக்கிறார்கள். குடியுரிமை திருத்தச் சட்டத்திற்கு எதிராக கிளர்ச்சிப் போராட்டங்களை நடத்துபவர்களை யெல்லாம் சுட்டுத் தள்ள வேண்டும் என்று கூறிக் கொண்டிருக்கிறார்கள். இது, வன்முறை அரசியலைக் கைவிட ஆட்சியாளர்கள் தயாரில்லை என்பதையே காட்டுகிறது. மேலும் கோட்சே வைத்திருந்த துப்பாக்கியைத்தான் இப்போதும் ஆட்சியாளர்கள் நேசப்பூர்வமாக வைத்திருக்கும் நிலையே உள்ளது.

சட்டவிரோத நடவடிக்கைகள் தடைச்சட்டத் தின் கீழ், பயங்கரவாத அமைப்புகள் சிலவற்றைத் தடை செய்திருக்கும் இக்காலத்தில் கல்புர்கி, நரேந்திர தபோல்கர், கோவிந்த் பன்சாரே, கௌரி லங்கேஷ் போன்ற முற்போக்காளர்களைக் கொல்வதற்குப் பின்னணியிலிருந்த 'சனாதன் சன்ஸ்தா' என்னும் பயங்கரவாத அமைப்பைத் தடை செய்யத் தயாரில்லை.

ஆட்சியாளர்களால் தேசியவாதம் என்பது மதத்தின் அடிப்படையில் பிளவுவாத விதைகளை விதைப்பதற்குப் பயன்படுத்தும் ஒரு கருவியாக மாறிவிட்டது. இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு எந்த மதிப்பையும், மரியாதையையும்

தராத ஆட்சியாளர்கள் நாட்டின் மதச்சார்பின்மை என்னும் பாரம்பரியத்தை அழித்துவிட்டு, இந்துத்துவா அடிப்படையிலான இந்து ராஷ்டிரத்தை அமைத்திட விரும்புகிறார்கள். இதை உலக நாடுகளே உணர்ந்துள்ளன.

கோல்வால்கர் தன்னுடைய சிந்தனைத் துளிகள் என்னும் நூலில் இந்திய அரசமைப்புச் சட்டம் குறித்துத் தன் சிந்தனைத் துளிகளாக.."நம் அரசியல் அமைப்புச் சட்டம் சிக்கலானதும், மேற்கத்திய நாடுகள் பலவற்றின் பல்வேறு அரசமைப்புச் சட்டங்களையும் ஒருங்கமைத்துக் கட்டப்பட்ட ஒன்றுமாகும். இது நம்முடையது என்று சொல்வதற்கு இதில் எதுவுமே இல்லை. நம்முடைய தேசியக் குறிக்கோள் என்ன என்பது குறித்து, வாழ்க்கையில் நம்முடைய முக்கியக் குறிக்கோள் என்ன என்பது குறித்து ஒரு வார்த்தையாவது இருக்கிறதா? இல்லை. ஐ.நா.ஸ்தாபனத்தின் கோரிக்கை சாசனத்திலிருந்து எடுக்கப்பட்ட அல்லது உலக நாடுகள் சங்கத்தி லிருந்து எடுக்கப்பட்ட அல்லது அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் அரசமைப்புச் சட்டங்களில் உள்ள சில அம்சங்கள் ஒன்றாக ஒருங்கிணைக்கப் பட்டுள்ள வெறும் தாறுமாறான குவியலாக அமைந்துள்ளது. வேறு வார்த்தைகளில் சொல்வ தானால் இந்திய அரசமைப்புச் சட்டத்தில் எந்தப் பிரதிபலிப்பும் இல்லை."

இத்தகைய கோல்வால்கரின் வெறுக்கத்தக்க சிந்தனையால் வேயப்பட்ட வீட்டில் வசித்து வருபவர்களே இன்றைய ஆட்சியாளர்கள் என்பதை மக்கள் உணர்ந்து வருகிறார்கள். குடியுரிமை திருத்தச் சட்டத்தை எதிர்த்துக் கிளர்ச்சிப் போராட்டங்களை நடத்தி வருபவர்களே உண்மையில் நாட்டையும் மக்களையும் நேசிப்பவர்கள் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

**-பெரணமல்லூர் சேகரன்**

# இரங்கல்



தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க துவக்க காலத்திலிருந்து தன்னை முழுமையாக இணைத்துக் கொண்ட களப்போராளி யாக திகழ்ந்தவரும், சங்கத்தின் ராமநாதபுரம் மாவட்ட முன்னாள் மாவட்டத் தலைவரும், தமிழ்நாடு மருத்துவத் துறை நிர்வாக ஊழியர் சங்கத்தின் முன்னாள் மாநில துணைத் தலைவரும், தமிழ்நாடு அரசு அனைத்துத் துறை ஒய்வூதியர் சங்கத்தின் முன்னாள் மாநிலத் துணைத் தலைவருமாகிய தோழர் வி.அல்லிமுத்து 10.2.2020 அன்று இயற்கை எய்தினார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரின் மறைவுக்கு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநில மையம் ஆழ்ந்த இரங்கலையும், கண்ணீர் அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்கிறது.

## சந்திப்புகளும் முறையீடுகளும்

நெல்லை மாவட்டம் வட்டக்கிளை நிர்வாகி ஜி.ரவி நிர்வாக காரணங்களைக்காட்டி சென்னைக்கு மாறுதல் செய்யப்பட்டதைத் தொடர்ந்து 7.2.2020 அன்று வேளாண்மை இயக்குநர் அவர்களுடன் மாநில நிர்வாகிகள் சந்தித்து முறையீடு செய்தனர். அதனடிப்படையில் நமது சங்கத்தின் கோரிக்கையை ஏற்று வேளாண்மை இயக்குநர் அவர்கள் பரிசீலிப்பதாக உறுதியளித்தார்.

கரூர் மருத்துவக் கல்லூரி முதல்வரின் ஊழியர் விரோத போக்கை கண்டித்து இயக்கம் நடத்திய காரணத்தால் முன்னாள் மாநில துணைத் தலைவரும், கரூர் மாவட்டத் தலைவருமான மு.சுப்பிரமணியம் மற்றும் 4 செவிலியர்களின் முறையற்ற மாறுதலை ரத்து செய்ய வலியுறுத்தியும், நாகை மாவட்டச் செயலாளர் ஏ.டி.அன்பழகன் துறை மாறுதல் செய்ததை கண்டித்தும் 25.2.2020 அன்று சுகாதாரத் துறை செயலாளருடன் சந்தித்து முறையீடு அளிக்கப்பட்டது.

சம்பளப் பட்டியல்கள் ஏற்கப்படாமலும், பட்டியல் போட முடியாமல் (Server Slow) இருப்பதால் பிப்ரவரி மாத சம்பளம்கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளதை கருவூல கணக்குத் துறை ஆணையரை 27.2.2020 அன்று மாநில நிர்வாகிகள் சந்தித்து முறையீடு செய்தனர். ஆணையர் மாவட்ட கருவூல அதிகாரிகள் மற்றும் சம்பள கணக்கு அலுவலர்களுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு ஊழியர்களின் பிப்ரவரி மாத சம்பளம் வழங்கிடும் வகையில் விரைந்து நடவடிக்கை எடுக்கும் வகையில் அறிவுறுத்தினார். ❖

# வரிக் கழிவுகளை ஒழித்துக்கட்ட முன்னோட்டம் பார்க்கும் மத்திய அரசு வருமான வரிக் குறைப்பில் மறைந்திருக்கும் மோசடி!

கடந்த பிப்ரவரி 1-ஆம் தேதி மத்திய பட்ஜெட்டைத் தாக்கல் செய்த நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், புதிய வருமான வரித் திட்டம் என ஒன்றை அறிமுகப்படுத்தினார். பழைய வருமான வரித் திட்டமும் எப்போதும் போல தொடரும் என்று தெரிவித்த அமைச்சர், வரி செலுத்துவோர் இரண்டில் ஒன்றை தேர்ந் தெடுக்கலாம் என 'சலுகை' காட்டினார்.

2020-21 நிதியாண்டில் வருமான வரிசெலுத்தும் 80 சதவீதம் பேர், தங்களின் புதிய திட்டத்திற்கு மாறி விடுவார்கள் என்றும் தற்போது அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார். ஆனால், பழைய வரித் திட்டத்தில் உள்ள வரி விலக்குகளை அடியோடு ஒழித்துக் கட்டுவதற்காகவே, புதியதிட்டத்தை மத்திய அரசு அறிமுகப்படுத்தி யுள்ளதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

அதாவது, புதிய வரித் திட்டத்தில்: 2.5 லட்சம் வரை வருமானம் இருந்தால் வரிகிடையாது; ரூ. 2.5 முதல் ரூ. 5 லட்சம் வருவாய்க்கு 5 சதவிகிதம் வரி செலுத்த வேண்டும். இது ஏற்கெனவே உள்ளதுதான். ஆனால், 5 லட்சத்திற்கு மேலான வருவாயையும், அதற்கான வரியையும் நான்கைந்து வரம்புகளுக்குள் மோடி அரசு கொண்டு சென்றுள்ளது.

ரூ. 5 லட்சம் முதல் 10 லட்சம் வரை என்றிருந்த வரம்பு, ரூ. 5 லட்சம் முதல் 7.5 லட்சம்; ரூ. 7.5 லட்சத்திலிருந்து ரூ.10லட்சம் வரை என்று இரண்டாக பிரிக்கப் பட்டு, இதற்கான வரி முறையே 10 சதவிகிதம் மற்றும் 15 சதவிகிதம் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது முன்பு மொத்தமாக 20 சதவிகிதம் என்றிருந்தது.

அதேபோல முன்பு, 10 லட்சத்திற்கு மேல் வருமானம் ஈட்டினால் 30 சதவிகிதம் வரி என்றிருந்தது. அதனை உடைத்து,ரூ.10 லட்சம் முதல் 12.50 லட்சம் வரை வருவாய் ஈட்டினால், அவர்களுக்கு 20 சதவிகிதம் வரி, 12.50 லட்சத்திற்கு மேல் 15 லட்சம்வரை வருவாய் ஈட்டுவோருக்கு 25 சதவிகித வரி; 15 லட்சத்திற்கு மேல் வருவாய்ஈட்டுவோருக்கு 30 சதவிகித வரி என்று விதிக்கப்பட்டுள்ளது.

நிர்மலா சீதாராமனின் அறிவிப்பு, மேலோட்டமாக பார்த்தால், வருமான வரம்பு குறைப்பு மூலம் ஏதோ வரிக் குறைப்பு செய்யப்பட்டிருப்பது போல தோற்றம் தரும்.

ஆனால், இந்த புதிய வரி விகிதத்தை ஏற்றுக் கொள்பவர்களுக்கு, 80 சி மற்றும்80 டி பிரிவுகளின் கீழ் பி.எப்., ஐந்து வருடநிரந்தர வைப்புத்தொகை, தேசிய சேமிப்பு பத்திரம், கிஷன் விகாஸ் பத்திரம், செல்வமகள் சேமிப்பு திட்டம், என்பிஎஸ், லைப் இன்சூரன்ஸ், ஹெல்த் இன்சூரன்ஸ், மாற்றுத் திறனாளிகளுக்கான வரிச்சலுகைகள், வீட்டு கடன் மற்றும் வீட்டுக் கடன் வட்டி உள்ளிட்ட 70-க்கும் மேற்பட்ட இனங்களில் இதுவரை வழங்கப்பட்டு வரும் வரிக்கழிவு, புதிய திட்டத்தில் கிடைக்காது என்ற மிகப்பெரிய ஆபத்து சாமர்த்தியமாக பின்னுக்குத் தள்ளப்பட்டுள்ளது.

உதாரணமாக ஒருவர் ஆண்டிற்கு ரூ.15 லட்சம் வருமானம் ஈட்டுகிறார் என்றால், அதில், வாடகைப்படி ரூ. 3 லட்சம்,வருங்கால வைப்பு நிதி, பல்வேறு சேமிப்பு, குழந்தைகளின் கல்விச் செலவு போன்றவற்றுக்கு 1.5 லட்சம், வழக்கமான தள்ளுபடி ரூ. 50 ஆயிரம் ஆகிய செலவுகளை கழித்துக் கொண்டு,ரூ. 10 லட்சத்திற்கு (ரூ. 1.17 லட்சம்) வரிசெலுத்தினால் போதுமானது.

ஆனால் மோடி அரசு அறிமுகப்படுத்தி யுள்ள புதிய திட்டத்தில் ரூ. 15 லட்சத்திற்கும் முழுமையாக வரி செலுத்த வேண்டும். எந்தவித தள்ளுபடியும் கிடையாது.

அப்படியாவது வரி குறையுமா, என்று பார்த்தால் ரூ. 15 லட்சத்திற்கு தற்போதுஇருக்கும் ரூ. 1 லட்சத்து 17 ஆயிரம் செலுத்த வேண்டும் என்றால், புதிய திட்டத்தில் கூடுதலாக 78 ஆயிரம் ரூபாய் (ரூ. 1.95 லட்சம்) வரி செலுத்த வேண்டும் என்று கூறப்படுகிறது. ஏனைய வருவாய் வரம்புகளுக்கும் இதேபோல கூடுதல் வரி செலுத்த வேண்டும்; அல்லது வரிச் சலுகைகளை இழக்க வேண்டும்.

எந்த திட்டத்தை தேர்ந்தெடுப்பது, என்பது வரி செலுத்துவோரின் விருப்பமாக தற்போது கூறப்பட்டிருந்தாலும், ஓரிரு ஆண்டுகளில் பழைய திட்டத்தை முற்றிலுமாக ஒழிப்பதற்கான முன் னோட்டமாகவே, புதிய திட்டத்தை அறிமுகப் படுத்தி இருப்பதாக பலரும் குற்றம் சாட்டு கின்றனர். ஆனால், இதனையெல்லாம் மறைத்துத் தான், பட்ஜெட்டில் வருமான வரி குறைக்கப் பட்டுள்ளதாக மத்திய அமைச்சர்களும், பாஜக வினரும் மக் களை ஏமாற்றி வருகின்றனர். ❖

# அஞ்சி அஞ்சி சாவோமா? அன்றி அஞ்சாமல் வாழ்வோமா?

நம்முடைய அலுவலகத்தில் சில ஊழியர்கள் அரசாங்கத்தின் அடக்குமுறைகளையும், அரசு ஊழியர்களுக்கு அரசாங்கம் செய்து வரும் நயவஞ்சகங்களையும் உட்கார்ந்திருக்கும் இடத்திலிருந்தும், கேன்டீன்களிலும், டீக்கடைகளிலும் உணர்ச்சி பொங்க பேசுவார்கள். அவர்களில் பலபேர் சங்கம் நடத்தும் கூட்டங்களில் கலந்து கொண்டு அரசாங்கத்தை ஒரு வழி பண்ண வேண்டுமென்று உணர்ச்சிவசப்படுவதையும், கோஷமிடுவதையும் கூட பார்த்திருப்போம். ஆனால் வேலை நிறுத்தப் போராட்டம் என்று வரும்போது அவர்கள் ரோஷத்தோடு வெளியில் வந்து நிற்பார்கள் என்று பார்த்தால் டீக்கடையிலும், கேன்டீனிலும், சங்கக் கூட்டத்திலும் பேசிய பேச்சுக்களுக்கும் தங்களுக்கும் எந்தவித பூர்வஜென்மத் தொடர்பும் இல்லாதது மாதிரி கோப்புகளுக்குள் முகத்தை புதைத்துக் கொண்டு உட்கார்ந்திருப்பார்கள்.

அடுத்தநாள் அந்தத் தோழரைப் பார்த்து ஏன் தோழர் போராட்டத்துல கலந்துகொள்ளவில்லை என்று கேட்டால், ''அதோ என்னைவிட வீராப்பா பேசினாரே சுப்பிரண்டு. அவர் கலந்துகிட்டாரான்னு முதல்ல கேளுங்க? அவரு மட்டும் வேலை நிறுத்தத்துல கலந்துக்காம ஆபீஸ்ல உட்கார்ந்துகிட்டு எங்களுக்கெல்லாம் மெமோ கொடுப்பாராம். நாங்கல்லாம் அதை வாங்கிகிட்டு பதில் தரணுமாம். போராட்டம் வெற்றியடைஞ்சி எல்லாருக்கும் சம்பளம் உயர்ந்தால் முதலில் பில்போட்டு அரியர் வாங்கறவர் அவராத்தான் இருப்பாரு.'' என்பார்.

பல அலுவலகங்களில் இது சாதாரணமாக நடக்கும் சங்கதிதான். சங்கத்தைப்பற்றியும், உரிமை இழப்புகளையும் பற்றி மற்ற நேரங்களில் வீராவேசமாக பேசுகிற ஊழியர்கள் சிலர். போராட்டம் வேலை நிறுத்தம் என்று வரும்போது மட்டும் பம்மிக்கொண்டு அலுவலகத்தில் உட்கார்ந்து கொள்வதற்கு முக்கிய காரணங்கள் இரண்டு உண்டு. ஒன்று பயம் இன்னொன்று கவலை. வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்டு வேலை போய்விட்டால் என்ன செய்வது என்ற பயமும், வேலை போய்விட்டால் குடும்பத்தை யார் காப்பாற்றுவது என்ற கவலையும்தான் அவர்களை ஆட்கொள்ளும் இரண்டு வில்லன்கள்.

இந்த பயமும் கவலையும் அவர்களைப்போல் எனக்கும் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் அந்த பயத்தை மீறி மனதில் இன்னொரு விஷயமும் குரங்கு, புண்ணை பிராண்டிக்கொண்டிருப்பதைப் போல அரித்துக் கொண்டே இருக்கும். 'அலுவலகத்தில் சில நபர்கள் உட்கார்ந்து வேலை பார்க்க, 'தில்'லாக வெளியில் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் தோழர்களிடம் அந்த பயமுமகவலையும் இருக்காதா?' அதைப்பற்றி பக்கத்திலிருக்கும் தட்டச்சரிடம் கேட்பேன். ''வெளியில நிக்கறவங்களுக்கு நல்ல பின்புலம் இருக்கும்பா. ஆதனாலதான் அவங்க இந்தவேலை போனாலும் சமாளிச்சக்கலாம் என்கிற தைரியத்தோட நிக்கறாங்க. ஆனா எனக்கெல்லாம் பாரு இந்த மாசம் சம்பளம் வரலேன்னா என் குடும்பம் என்ன ஆகுமோங்கற பயம்தான் கண் முன்னால நிக்குது.''

''அண்ணே ஊழியர்களுக்கு எதுனா ஒன்னு ஆனா சங்கம் உதவி ஏதும் செய்யாமலா போயிடும்.''

''பண்ணனும். பண்ணும்ங்கற நம்பிக்கையிருக்கு. ஆனா அதைவிட ஒருவேளை அவங்களாலயே பண்ண முடியாம போயிட்டா என்னாகும்கிற பயம் அதைவிட அதிகமா இல்ல இருக்கு ''

''இந்த பயம் உங்களுக்கு எவ்வளவு நாளான்னா இருக்கு?''

''வேலையில சேர்ந்ததிலிருந்தே இருக்கு.''

இதுபோன்ற ஆட்கள் ரிட்டயர் ஆகிவிட்டாலும் இந்த வியாதி போகாது. பின்னே, பயம்ங்கற ஒரு மனோபாவத்தை சுகர் மாதிரி ஒரு வியாதியா மாத்தி வச்சிக்கிட்டிருக்கிற இவரைப் போன்ற பல நபர்கள் வேலையில மட்டுமில்ல வாழ்க்கையிலம் பயத்தோடு தான் வாழ்வார்கள்.

'அஞ்சி அஞ்சி சாவார் - இவர் அஞ்சாத பொருளில்லை அவனியிலே' என்றார் பாரதி. 'காலா என் காலருகே வாடா உன்னை என் காலால் உதைப்பேனடா' என்று பாரதி சொன்னதை இவர்களிடம் சொன்னால் 'காலனை காலால் உதைத்தால் காலில் அடிபட்டுடும்' என்ற பயத்தை நமக்கு ஏற்படுத்துவார்கள். இவர்கள் எதைச்செய்தாலும் ஒருவித பயத்தோடு செய்வார்கள். 'காடு பயமெனக்கு, நாடு பயமெனக்கு, கூடு பயமெனக்கு. நண்டு கண்டால் பயமெனக்கு,

பூச்செண்டு கண்டால் பயமெனக்கு, பூச்செண்டுக்குள் இருக்கிற வண்டு கண்டாலும் பயமெனக்கு. சாக பயமெனக்கு, வாழவும் பயமெனக்கு'' என்று தெனாலி கமல்ஹாசனைப்போல் இவர்கள் ஆழ்மனதில் எப்போதும் ஒரு ஆடியோ ஓடிக்கொண்டே இருக்கும். இவர்களை இந்த பயத்திலிருந்து வெளிக்கொண்டு வருவதற்கு தோழர்கள் மிகவும் முயற்சி செய்ய வேண்டியதிருக்கும். 'அஞ்சுவ தஞ்சாமை பேதமை' என்றார் வள்ளுவர். பயப்பட வேண்டிய விஷயங்களுக்குத்தான் நாம் பயப்பட வேண்டும்தான். அதற்காக எதற்கெடுத்தாலும் பயந்து கொண்டிருப்பது அர்த்தமற்றது என்பதை இவர்களுக்கு உணர்த்த வேண்டிய பொறுப்பு முன்னணித் தோழர்களுக்கு உண்டு.

பயத்தில் வாழ்பவர்களெல்லாம், எப்படி மோகன்தாஸ் காந்தி என்ற இளைஞர், வழக்கறிஞராய் வாழ்வைத் துவங்கினார் என்பதை அறிந்து கொள்வது நல்லது. அவர் தன் முதல் வழக்கின் போது வாதாட நீதிமன்றத்தில் எழுந்து நின்றபோது அவருடைய கண்கள் இருண்டன. காதுகள் பஞ்சடைத்தன. நா தழுதழுத்தது. பயம் அவரை ஆட்கொண்டிருந்தது. பிற வழக்கறிஞர்களும், நீதிபதியும் புன்னகைத்திருக்கக் கூடும். அவர் மனதிலிருந்த பயம் அவர் சொல்ல வந்த வாதத்தை எடுத்து வைக்க முடியாமல் செய்துவிட்டது. அத்தகைய மனிதர்தான் இந்தியாவின் விடுதலை கோரிக்கையை எடுத்துக் கொண்டு இங்கிலாந்தின் பாராளுமன்றத்திலே தைரியமாகப் பேசினார், விவாதித்தார். வாதிட்டார். அவருக்குள் எப்படி நிகழ்ந்தது இந்த மாற்றம்?

தத்துவ ஞானி எமர்சன் சொல்கிறார், ''எதைக்கண்டு பயப்படுகிறீர்களோ அதை செய்யத் துவங்குங்கள்.பயம் செத்துப்போவதைக் காண்பீர்கள்'' என்று. நீரைக்கண்டு பயப்படுபவன் குளத்தில் இறங்கி நீந்தக் கற்றுக்கொள்ள வேண்டும். அப்போதுதான் நீரைப்பற்றிய பயம் போகும்.

பயத்தைப்பற்றி யோகானந்தர் சொன்ன கதையை இங்கே சொல்ல வேண்டியிருக்கிறது. ஒரு ஞானியிடம் ஒரு சுண்டெலி வந்து, 'ஞானியே இந்தப் பூனையைக் கண்டு எனக்கு பயமாயிருக்கிறது. என்னை ஒரு பூனையாக மாற்றிவிட்டால் உங்களுக்குப் புண்ணியம்' என்றது. ஞானி எலியை பூனையாக மாற்றினார். ஒரு வாரம் கழித்து மீண்டும் அப்பூனை வந்து, 'ஞானியாரே என்னை இந்த நாய் என்னை விரட்டுகிறது. என்னை நாயாக மாற்றிவிட்டால் தேவலாம்' என்றது. ஞானி பூனையை நாயாக மாற்றினார். அடுத்த சில நாட்களில் அந்த நாய் வந்தது. ''இப்போது என்ன பிரச்னை?'' என்றார் ஞானி. ''இந்தப்புலி என்னை பாடாத பாடு படுத்துகிறது. தயவு செய்து என்னை புலியாக மாற்றிவிடுங்கள்.'' என்றது. ஞானி, நாயைப் புலியாக மாற்றினார். ஆனால் சில நாட்களில் மீண்டும் புலி அங்கே வந்து மன்றாடியது.''இக்காட்டில் வேடன் என்னை வேட்டையாட வருகிறான். தயவு செய்து என்னை வேடனாக மாற்றிவிடுங்கள்.''என்று கெஞ்சியது. ''அப்படியே ஆகட்டும்'' என்று ஞானி புலியை வேடனாக மாற்றினார். சில நாட்களில் வேடன் ஞானி முன் வந்து நின்றான். தயங்கித் தயங்கி, ''குருவே எனக்கு பிற மனிதர்களைக் கண்டால் பயமாக இருக்கிறது ஆகவே...'' என்றவனை இடைமறித்தார் ஞானி, ''ஏ, சுண்டெலியே உன்னை எதுவாக மாற்றினால்தான் என்ன? உன் பயம் உன்னைவிட்டுப் போகாது. நீ பழையபடி சுண்டெலியாக இருக்கத்தான் லாயக்கு.'' என்று அவனை சுண்டெலியாக மாற்றிவிட்டாராம்.உள்ளத்தில் பயம் அகலாதவரை எதுவாக மாற்றினால் என்ன?

எனவே எலியாக பயத்துடன் இருந்து கொண்டு புலியாக மாறாமுடியாமல் இருக்கும் ஊழியர்களின் மனத்தில் உள்ள பயத்தை போக்கிட முன்னணித் தோழர்களும் நிர்வாகிகளும் சிரத்தைகளை முன்னெடுப்போம். ஊழியர்தம் மனத்தில் உள்ள தேவையற்ற பயங்களைப் போக்கி நம்பிக்கை எற்படுத்தும் பணியை நாம் செய்வதன்மூலம் அவர்கள் சிறந்த சங்கவாதிகளாக மட்டுமல்ல, சமூகவாதிகளாகவும் மாறுவது தீட்சண்யம்.

- ஜிஜி

## தோழர் எம்.தங்கராஜ் பணி ஓய்வு



*தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் முன்னாள் மாநிலப் பொருளாளரும், அரசு ஊழியர் வாழ்வின் முன்னேற்றத்திற்காக நடத்திய போராட்டங்களில் முழுமையாக பங்கேற்றவரும், உழைப்பாளி வர்க்கப் போராளியுமான தோழர் எம்.தங்கராஜ் வயது முதிர்வின் காரணமாக கடந்த 28.02.2020 அன்று அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார். அன்னாருக்கு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில மையம் சார்பில் வீரஞ்செறிந்த வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறோம்.*

# வழிநடத்த வேண்டியவர்கள் குழி பறிக்கலாமா?

என் இனிய மூத்த தோழமையே!
என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை!
நீங்கள் தலைவர்கள் என்ற போது
நாங்கள் கொண்டாடினோம்!
வழி நடத்திய போது இயங்கினோம்!
இயக்கத்தில் நடைபெற்ற பல போராட்ட வெற்றிகள்!
எல்லா போராட்டங்களும் வெற்றியை நோக்கியே இருக்குமா!
அரசின் கடும் அடக்குமுறை!
ஒற்றுமையை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்!
ஊழியர்களை பாதுகாக்க வேண்டும்!
இச்சூழ்நிலையில் தலைமை மீது விமர்சனம்,
சுயவிமர்சனம்! எந்த பதிலும் புரியவில்லை!
என்ன எதிர்பார்க்கிறீர்கள்! என்றும் தெரியவில்லை!

அழகு பார்த்து, அடையாளப்படுத்தி
சிம்மாசனத்தில் உட்கார வைத்த இயக்கத்தை
விமர்சனம் செய்து போராட்டம்!
என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை!
உங்களுக்கு தைரியம் கொடுத்த,
விலாசம் கொடுத்த இயக்கத்தை
கேள்வி கேட்கிறீர்கள்!
என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை!
என்ன வேண்டும் உங்களுக்கு!
தனிமனித குரோதமா! என்னால் புரிய முடியவில்லை!

நீங்கள் நடத்துகின்ற இந்த போராட்டம்
ஆளும் வர்க்கத்திற்கு பயன்படுமா?
ஊழியர்களுக்கு பயன்படுமா?
என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை!
மாநில மாநாடு ஜனநாயக ரீதியில் தேர்தல்!
தேர்தல் முடிவு! இணைந்து செயல்படுவது தான் இயக்கம்!
மீண்டும் தலைமை மீது விமர்சனம் செய்கிறீர்கள்!!
சங்கத்துக்கு எதிராக வழக்கு! சங்கத்தை முடக்க ஏற்பாடு!

என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை!
என்ன வேண்டும் உங்களுக்கு!
நீங்களெல்லாம் இயக்கத்தை
முன்னெடுத்த மூத்த தோழர்கள்!
இன்று ஓய்வுக்குப் பின் ஒரு சில தடம்
மாறிய தோழர்களின்
தவறான வழிகாட்டுதல்!
நீங்கள் தலைமை தாங்கிய போது
நாங்கலெல்லாம் ஒத்துழைப்பு கொடுத்தோமே?
இன்று இந்த சங்கத்தை வழிநடத்த வேண்டிய
சில தோழர்கள் தவறான பாதையில் சென்றால்
நீங்கள் ஆதரவு கொடுக்கலாமா?
என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை!
எது எப்படி வரினும் தனிநபர் நலனை விட,
ஸ்தாபன நலன் தான் முக்கியம் என்று சொன்னீர்களே!
தவறான வழிக்கு போகும் தோழர்களை
திருத்துவதை விட்டுவிட்டு அவர்கள்
நடத்தும் போராட்டத்தை ஆதரிப்பது
எப்படி இந்த இயக்கத்தை முன்னெடுத்துச் செல்லும்?
என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை!

இருப்பினும் எனக்கு நம்பிக்கை இருக்கிறது!
1905ல் கவிஞன் எழுதிய வார்த்தைகள்!
நினைவுக்கு வருகிறது!!
தொழிலாளி வர்க்கம்! ஓராயிரம் முறை விழும்! எழும்!
சொந்தங்களாலேயே காட்டிக் கொடுக்கப்படும்!
நீதிமன்றங்களால் வசைபாடப்படும்!
அரசுகளால் நசுக்கப்படும்!
ஆனால், அது மீண்டும்! மீண்டும்!! எழும்!!! எழும்!!!
இறுதியில் அஃது ஒன்றே வெற்றி பெறும்!
என்ற நம்பிக்கை இன்னமும் இருக்கிறது!

**கெ.சக்திவேல்**, கரூர்

## கரூரில் ஊழியர் விரோத போக்கை கண்டித்து ஆர்ப்பாட்டம்



*கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வரின் ஊழியர் விரோதப் போக்கை கண்டித்தும், அரசு ஊழியர் சங்க நிர்வாகிகளை இடமாற்றம் செய்ததை கண்டித்தும் 24.02.2020 அன்று மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முன்பாக மாவட்டத் தலைவர் மு.சுப்பிரமணியன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் கெ.சக்திவேல் விளக்க உரையாற்றினார். சிஐடியு மாவட்டத் தலைவர் ஜி.ஜீவானந்தம், தோழமை சங்க நிர்வாகிகள் மலைக்கொழுந்தன், ஐ.ஜெயராஜ், மு.செல்வ ராணி உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினர். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் துணைத் தலைவர் ஆர்.மங்களபாண்டியன், மாநிலச் செயலாளர் உ.சண்முகம் கண்டன உரையாற்றினர். மாவட்டப் பொருளாளர் பொன்.ஜெயராம் நன்றி கூறினார். இதில் 50 பெண்கள் உட்பட 150க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.* ❖

# துறைவாரி சங்க நிகழ்வுகள்

## தமிழ்நாடு கிராம சுகாதார செவிலியர் சங்கம்

சங்கத்தின் ஐந்தாவது மாநில மாநாடு நாகப்பட்டினம் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க கூட்ட அரங்கில் மாநிலத் தலைவர் சி.பரமேஸ்வரி தலைமையில் நடைபெற்றது. வரவேற்புக் குழு தலைவரும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க நாகை மாவட்டச் செயலாளருமான அ.தி.அன்பழகன் வரவேற்புரையாற்றினார். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநிலச் செயலாளர் சி.ஆர்.ராஜகுமார் துவக்கவுரையாற்றினார். மாநில பொதுச் செயலாளர் பா.ராணி நடைபெற்ற வேலைகள் குறித்து அறிக்கைகளை சமர்ப்பித்தார். பிரதிநிதிகள் விவாதத்திற்கு பின்னர் அறிக்கை ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மாநில துணைத் தலைவர்கள் சி.இளஞ்சியம், ஏ.ராணி, கே.ஜெயலெட்சுமி மாநிலச் செயலாளர்கள் ஏ.பிரகலதா, கே.பூங்குழலி, மாநிலத் தணிக்கையாளர் எம்.மரகதம் ஆகியோர் தீர்மானங்களை முன்மொழிந்தார். பின்னர் நடைபெற்ற நிர்வாகிகள் தேர்வில் மாநிலத் தலைவராக சி.பரமேஸ்வரி, மாநில பொதுச் நாகப்பட்டினம், மாநிலப் பொருளாளராக ஏ.பிரகலதா, மாநில துணைத் தலைவர்களாக கே.பூங்குழலி, பி.இளஞ்சியம், ஏ.பி.பிரபாவதி, ஏ.ராணி, ம்.மரகதம், திருமாமகள், மாநிலச் செயலாளர்களாக கே.ஜெயலெட்சுமி, பி.அமுதா, பரமேஸ்வரி, கே.தேவிகா, விஜயராணி, மாநிலத் தணிக்கையாளர்களாக பாஸ்கர் வள்ளி, பூங்காவனம் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

நாகை தொழிற்சங்க கூட்டமைப்பு தலைவர் சு.சிவகுமார், இந்திய தொழிற்சங்க மைய மாவட்டச் செயலாளர் சீனி.மணி, புள்ளியியல் சார்நிலை அலுவலர் சங்க மாநிலத் தலைவர் ப.அந்துவன்சேரல் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநில துணைத் தலைவர் கோ.பழனியம்மாள் சிறப்புரையாற்றினார். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநிலச் செயலாளர் டி.வாசுகி நிறைவுரையாற்றினார்.

முன்னதாக நாகப்பட்டினம் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக பணிமனை முன்பிருந்து நடைபெற்ற மாநாடு பேரணியை தமிழ்நாடு கூட்டுறவுத்துறை ஊழியர் சங்க மாநிலத் தலைவர் எம்.சௌந்தர்ராஜன் துவக்கிவைத்தார். மாநிலம் முழுவதும் இருந்து முன்னூறுக்கும் மேற்பட்ட கிராம சுகாதார செவிலியர்கள் மாநாட்டில் பங்கேற்றனர். இறுதியாக புதிய மாநில பொதுச்செயலாளர் பா.ராணி நன்றியுரையாற்றினார்.

## தமிழ்நாடு அரசு அனைத்து மருந்தாளுநர் சங்கம்

சங்கத்தின் சார்பில் 13.2.2020 அன்று சென்னை டி.எம்.எஸ். வளாகத்தில் பெருந்திரள் முறையீடு போராட்டம் நடைபெற்றது. எட்டு ஆண்டுகளுக்கு மேலாக நகர ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணிபுரிந்து வரும் மருந்தாளுநர்களை பணிவரன்முறை செய்திடக் கோரி நடைபெற்ற போராட்டத்தில் பொது சுகாதாரத் துறை இயக்குநரை சந்தித்து முறையீடு அளிக்கப்பட்டது. இந்நிகழ்வுக்கு மாநிலத் தலைவர் மு.சுப்பிரமணியன் தலைமையேற்றார். மாநில அமைப்பு செயலாளர் வி.விஜயகுமரன் வரவேற்றார். மாநில பொதுச் செயலாளர் உ.சண்முகம் விளக்கவுரையாற்றினார். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநிலச் செயலாளர்கள் ந.நம்புராஜன், தெ.வாசுகி, வடசென்னை மாவட்ட செயலாளர் ம.அந்தோணிசாமி, தென்சென்னை மாவட்டத் தலைவர் சா.டேனியல் ஜெய்சிங், மாவட்டச் செயலாளர் நா.வினோத்குமார், மாவட்ட இணைச் செயலாளர் மா.செந்தில்குமார், டி.எம்.எஸ் பகுதிக் குழு தலைவர் ந.மணிமாலா, செயலாளர் பெ.ஜெயராமன் ஆகியோர் வாழ்த்தி பேசினர். மாநிலச் செயலாளர்கள் ச.ஹேமலதா, பி.ஞானப்பிரகாசம், து.முருகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநில பொருளாளர் அ.விஸ்வேஸ்வரன் நன்றி கூறினார்.

## தமிழ்நாடு நெடுஞ்சாலைத் துறை சாலைப் பணியாளர் சங்கம்

சங்கத்தின் 7வது மாநில பிரதிநிதித்துவப் பேரவை 8.2.2020 அன்று திருவண்ணாமலை ஆண்டாள் சிங்காரவேலு திருமண மண்டபத்தில் மாநிலத் தலைவர் மா.பாலசுப்பிரமணியன் தலைமையில் கொடியேற்றத்துடன் துவங்கி நடைபெற்றது. அரசு ஊழியர் சங்கக் கொடியை சங்கத்தின் பொதுச் செயலாளர் ஆ.செல்வமும்,

சம்மேளனக் கொடியை துணை பொதுச் செயலாளர் மு.அன்பரசும் ஏற்றி வைத்தனர். வரவேற்புக் குழுத் தலைவர் மு.பாஸ்கரன் வரவேற்றார். அஞ்சலித் தீர்மானத்தை மாநில துணைத் தலைவர் பெ.முத்து வாசித்தார்.

அரசு ஊழியர் சங்க பொதுச் செயலாளர் ஆ.செல்வம் பேரவையை துவக்கி வைத்தார். சங்கத்தின் பொதுச் செயலாளர் ஆ.அம்சராஜ் வேலை அறிக்கை மற்றும் பொருளாளர் இரா.தமிழ் வரவு-செலவு அறிக்கையை தாக்கல் செய்தனர். மாநில நிர்வாகிகள் பா.கோதண்டபாணி, து.சிங்கராயன், வே.கணேசன், கா.ரவி, க.கோவிந்தன், ச.மகேந்திரன், செ.சையது யூசுப், செந்தில்நாதன் ஆகியோர் தீர்மானங்களை முன்மொழிந்து பேசினர். நெடுஞ்சாலைத் துறை ஊழியர் சங்கத்தின் அ.ரங்கசாமி, வருவாய்த் துறை அலுவலர் சங்கத்தின் எஸ்.பார்த்திபன், ஊரக வளர்ச்சித் துறை அலுவலர் சங்கத்தின் எஸ்.பாரி, கல்வித் துறை நிர்வாக அலுவலர் சங்கத்தின் ஏ. சேகர், நில அளவைத்துறை அலுவலர் ஒன்றிப்பின் ஜெ.ராஜா, அரசு ஊழியர் சங்கத்தின் ஆர்.ஜோதிசங்கர், வேளாண்மைத் துறை அமைச்சுப் பணியாளர் சங்கத்தின் பி.வேங்கடவரதன், சத்துணவு ஊழியர் சங்கத்தின் கே.அண்ணாதுரை, அனைத்துறை ஓய்வூதியர் சங்கத்தின் ஏ.அருண்பாட்ஷா, ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணியின் ஏ.அந்தோணிராஜ் ஆகியோர் வாழ்த்தி பேசினர். சிஐடியு மாநிலத் தலைவர் அ.சவுந்தரராசன் சிறப்புரை ஆற்றினார். நிறைவாக அரசு ஊழியர் சங்க மாநிலத் தலைவர் மு.அன்பரசு உரையாற்றினார். வரவேற்புக் குழு செயலாளர் எம்.மகாதேவன் நன்றி கூறினார். இதில் மாநில பிரதிநிதித்துவப் பேரவை உறுப்பினர்கள் 500க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

## மருந்தாளுநர் சங்க பயிற்சி வகுப்பு

தமிழ்நாடு அரசு அனைத்து மருந்தாளுநர் சங்கத்தின் மாநில, மாவட்ட நிர்வாகிகளுக்கான பயிற்சி வகுப்பு 8.2.2020 மற்றும் 9.2.2020





தேதிகளில் கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் நடைபெற்றது. "மருந்தாளுநர் சங்க வரலாறு" என்ற தலைப்பில் முன்னாள் பொதுச் செயலாளர் அ.பால்முருகன் மற்றும் ம.தேவேந்திரன், "சங்கமும் சமூகப் பார்வையும்" என்ற தலைப்பில் தமுஎகச மாநில துணைத் தலைவர் மதுக்கூர் ராமலிங்கம், "மருந்தியல் கொள்கையும் மக்கள் நலனும்" என்ற தலைப்பில் சமூக செயல்பாட்டாளர் ந.சிவகுரு, "சங்கமும் நமது கடமையும்" என்ற தலைப்பில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநிலச் செயலாளர் சி.ஆர்.இராஜ்குமார், "மருந்தியல் சட்டமும் மருந்தாளுநர்களும்" என்ற தலைப்பில் முன்னாள் மாநிலத் தலைவர் வி.கோவிந்தராஜ் ஆகியோர் கருத்துரையாற்றினர். இந்நிகழ்வுக்கு மாநிலத் தலைவர் மு.சுப்பிரமணியன் தலைமை தாங்கினார். கன்னியாகுமரி மாவட்ட செயலாளர் ந.சுப்பையா வரவேற்றார். மாநில அமைப்புச் செயலாளர் வி.விஜயகுமரன், மாநிலச் செயலாளர் ஞானப்பிரகாசம், டி.முருகன், ஹேமலதா, சகாதேவன், முத்துக்குமரன், தணிக்கையாளர்கள் ராஜராஜன், பசுபதி ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநில பொதுச் செயலாளர் உ.சண்முகம் நன்றி கூறினார். ❖

Printed and Published by M. ANBARASU on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: A.SELVAM. Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com